# யா / குட்டியப்புலம்
# அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
# வயாவிளான்

# வைர விழா சிறப்பு மலர்



நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

2018

★ கற்றாய்ந்தொழுக ★

# யா/குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

*மகுட வாசகம்*

"கற்றாய்ந்தொழுகு"

***நோக்கக்கூற்று***

"காலமாற்றத்திற்கேற்ப சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் பயன்படத்தக்க அறிவுத்திறன் மிகு மாணவர் உருவாக்கம்

***செயற்கூற்று***

மாற்றமுறும் உலகின் சவால்களை வெற்றி கொள்வதற்கு அறிவு திறன் மனப்பாங்கு விருத்திக்கும் நல் விழுமியங்களுடன் ஆளுமை விருத்திக்கும் பொருத்தமான கல்வியை வழங்குவோம்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்து மளந்திடும்
வன்மொழி வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானமறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

-மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

# பாடசாலைக் கீதம்

இராகம் - மோகனம் தாளம் - ஆதி (திஸ்ரநடை)

பல்லவி

வாழ்க குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
வீரம் தியாகம் சேவையாலே நனி சிறந்து தலை நிமிர்ந்து

சரணம்

பத்தொன்பது நூற்றைம்பத் தெட்டில் பக்குவமாய் பிறந்து வளர்ந்து
எத்திசையும் புகழ் மணக்கும் தமிழொடு ஆங்கிலம் கணிதம்
அர்த்தம் நிறைவிஞ்ஞானம் சமயம் வர்த்தகம் தொழிநுட்பம் சமூகம்
முத்தென அழகியல் மனையியல் விளையாட்டும் எமக்களித்து

சரணம் II

கல்வியோடு கண்ணியம் சேர் பண்புகளும் எமக்களித்து
நல்லிதய மானிடராய் சமுதாயத்தில் எமை நிறுத்த
வல்லமை தரு வளங்கள் தேடி எமக்களிக்கும் அதிபரோடு
நல்லுணர் வோடெம்மை அறிஞர்கள் ஆக்கிடும் எங்கள் ஆசிரியர்களும்

(வாழ்க குட்டியப்புலம்)

திரு.பொன்.ஸ்ரீ.வாமதேவன்

## பாடசாலை சுய விபரம் - 2018

| | | |
|---|---|---|
| 1. | பாடசாலையின் பெயர் | : யா/குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை |
| 2. | பாடசாலை முகவரி | : குட்டியப்புலம், வயாவிளான் |
| 3. | மாகாணம் | : வடமாகாணம் |
| 4. | மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| 5. | கல்வி வலயம் | : வலிகாமம் |
| 6. | கல்விக் கோட்டம் | : தெல்லிப்பழை |
| 7. | பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | : 1958.03.09 |
| 8. | பாடசாலையின் மகுடவாசகம் | : கற்றாய்ந் தொழுகு |
| 9. | பாடசாலையின் வகை | : வகை II |
| 10. | பயன்படுத்தப்படும் நிறங்கள் | : நீலம், வெள்ளை |
| 11. | வகுப்புக்கள் | : தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை |
| 12 | கிராமசேவையாளர் பிரிவு | : J/244, குட்டியப்புலம் |
| 13. | பிரதேச செயலர் பிரிவு | : வலி வடக்கு தெல்லிப்பழை |
| 14. | பாடசாலை இல | : 1013041 |
| 15. | பாடசாலை தொகை மதிப்பீட்டு இலக்கம் | : 09245 |
| 16. | பாடசாலையின் நிறுவுநர், முதலாவது அதிபர் | : திரு. ஜோன் ஹென்றி |
| 17. | பாடசாலையின் தற்போதைய அதிபர் | : திரு.வை.விஜயபாஸ்கர் |
| 18. | பாடசாலை ஆசிரியர் தொகை | : 22 |
| 19. | பாடசாலையின் மாணவர் தொகை | : 343 |

# வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி




வலிகாமம் கல்வி வலயத்தின் யா/குட்டியபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் நிறுவுநர் தினத்தையும், வருடாந்த பரிசளிப்பு விழாவையும் 20.03.2018 இல் ஏற்பாடு செய்துள்ளமையையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அதனை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் மகிழ்வடைகின்றேன். பாடசாலையின் நிறுவுநராகிய அமரர் உயர்திரு.ஜோன் ஹென்றி அவர்கள் கல்விப் பாரம்பரியத்தில் தோன்றிய ஒருவர். இவர் இப்பாடசாலையின் முதலாவது அதிபராகவும் செயற்பட்டு இப்பாடசாலையின் வளர்ச்சியில் குட்டியப்புலம் பிரதேச முற்போக்குச் சிந்தனையாளர்களுடன் இணைந்து ஆற்றிய பணி என்றும் போற்றுவதற்குரியதாகும்.

இவ்வாறு உருவாக்கம் பெற்ற இப்பாடசாலையின் பல்வேறு விடயங்களையும் தன்னகத்தே கொண்டு அமையும் இந்நூல் எதிர்காலத்தில் ஒரு சான்றாக அமைய வேண்டும். வளர்ந்து வரும் பாடசாலைகளில் ஒன்றாகிய இப்பாடசாலையைத் தொடர்ந்து வரும் காலங்களில் கல்வித் தரத்திலும், ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னிலைப்படுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலை அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும், சமூகத்துக்கும் உள்ளது. பாடசாலைச் சமூகம் தமது பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியில் விசேடமாக அக்கறை செலுத்துவதோடு, பாடசாலையின் வளர்ச்சியில் அதிபர் ஆசிரியர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்விக்கென விருப்புடன் நாடுகின்ற ஒரு பாடசாலையாக இப் பாடசாலை ஆக்கப்பட வேண்டும். பாடசாலை வசம் ஒப்படைக்கபட்டுள்ள எதிர்காலத்தின் சிற்பிகளான மாணவர்களின் ஆளுமைத்திறன் விருத்திக்கு வழிகாட்டியாக பாடசாலையின் செயற்பாடுகள் அமைய வேண்டும். தொடர்ந்து வரும் காலங்களில் சகல துறைகளிலும் மேலும் வளர்ச்சி காண வேண்டும்.

பரிசளிப்பு விழாவில் பரிசுகளைப் பெறும் மாணவர்களையும் அவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த ஆசிரியர்கள் மற்றும் அதிபருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, விழாவின் பொருட்டும், மலர் வெளியீட்டின் பொருட்டும் முன்னின்றுழைத்த அனைவருக்கும், நிறுவுநர் தினம் மற்றும் பரிசளிப்பு விழாவுக்கான அனுசரணையாளர்களான அவரது குடும்பத்தினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், நிறுவுநர் தினமும், மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

செல்வரட்ணம் சந்திரராஜா.
கல்விப் பணிப்பாளர்.
வலிகாமம் கல்விவலயம்.

# பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி



வயாவிளான் குட்டியப்புலம் கிராமத்திற்கென 1958ம் ஆம் ஆண்டு அமரர் ஜோன் கென்றி அவர்களால் உருவாக்கப் பட்ட யா/ குட்டியப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையானது சமூகத்திற்கு நற் பிரஜைகளையும், சிறந்த கல்வியளாளர்களையும் உருவாக்கித்தந்து இன்று தனது சேவையில் 60 ஆவது அகவையில் கால் பதித்தமையினையிட்டு மகிழ்ச்சியடையும் இந்நேரத்தில் இந் கல்விச் சாலையின் உருவாக்கத்திற்காக செயற்பட்ட அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

ஊரில் பெயர் சொல்லும் வகையில் இவ் பாடசாலையினை வளர்த்தெடுக்க இங்கு பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களையும் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர் களாவார்கள்.

இவ் 60 ஆவது ஆண்டில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை தொடரவும் இங்கு கல்விபயிலும் மாணவர்கள் இன்றைய நவீன உலகில் நல் ஒழுக்கமுடையவர்களாகத் திகழவும், நற்கல்வியினைப் பெற்று வாழ்க்கையில் வெற்றி பெறவும் வாழ்த்துக்கள்.

இப்பாடசாலையினை நிறுவி முதல் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றிய அமரர் ஜோண் கென்றி அவர்களின் நினைவு தினமும், பரிசளிப்பு நிகழ்வும் சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல இறையேசுவின் அருட்கிருபையும். அன்னை வேளாங்கன்னியின் பரிந்துரையும் நிறைவாகக்கிடைக்கப்பெற ஆசிக்கின்றேன்.

அருட்பணி. கி.ஜெயக்குமார்
பங்குத்தந்தை
வயாவிளான்.



# அபிராமி அம்பாள் ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி


யா/குட்டியப்புலம் அ.த.க பாடசாலையின் நிறுவுனர் தினமும் வைரவிழா நூல் வெளியீடும் குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

யா/குட்டியப்புலம் என்னும் பெரும் விவசாய வளங்களைக் கொண்டு கல்விமான்களும் கலை வளங்களும் மேலோங்கி வளர்ச்சி பெறும் இவ் ஊரில் இன மத வேற்றுமை இன்றி பல கல்வியாளர்களை வளர்த்தெடுக்கும் யா/குட்டியப்புலம் அ.த.க பாடசாலை மேலும் மேலும் வளர்ச்சியுறவும், ஆசிரியர்களுடைய வழிகாட்டலில் பல கல்வித் திறமைகள் மற்றும் கலை வளங்கள் கொண்ட இந்நூல் வெளியீட்டின் பெருமைகளை கண்டு இவ்வூர் அருளாட்சித் தெய்வமாக விளங்குகின்ற ஸ்ரீ அபிராமி அன்னையுடைய திருவருளும் குருவினுடைய ஆசிகளும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

சிவஸ்ரீ பேரம்பல திருஷனக் குருக்கள்
"வாமதேவ சிவாச்சாரியார்"
"அபிராமி அம்மன் ஆலய பிரதமகுரு"

# நெயின்போ தேவாலய தலைமை போதகரின் ஆசிச் செய்தி



ஆண்டுகள் அறுபது ஆயினும் மனதை விட்டு நீங்காது இன்னும் பல ஆண்டுகள் தன் சாதனையை நிலைநிறுத்தக் காத்திருக்கும் யா/குட்டியபுலம் அ.த.க பாடசாலையை வாழ்த்துவதில் மகிழ்கிறேன். அமரர் திரு.ஜோன்ஹென்றி என்பவரின் தரிசனத்தில் 1958ம் ஆண்டு தோன்றியது தான் யா/குட்டியபுலம் அ.த.க பாடசாலை. அன்று கல்வியைக் குறித்த தரிசனம் "அழியா செல்வம் வாழ வைக்கும் வழி காட்டிய கல்வி" மனிதன் தன் வாழ்நாளில் தொலைத்து போடா செல்வம் இக்கல்வி.

இத்தரிசனம் ஆரம்பிக்கும் போது சிலர் தரிசனத்தை ஊக்குவித்தனர். இந்த வகையில் திரு.மா.பொன்னு திரு.நா.ஆறுமுகம் என்போர் இவருடன் இக்கல்வியை கற்பிக்க கரம்கோத்து நின்றனர். இந்த முயற்சிக்கு தங்கள் பங்காக பாடசாலை வளாகத்தை திரு.நா.முதலி, திரு.சிங்கம் ஆகியோர் அன்புடன் வழங்கினார்கள். இத்தினைக்கும் மேலாக!

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லவராகிய இயேசு கிறிஸ்துவின் அருள் திரு.ஜோன் ஹென்றியை ஊக்குவித்து இந்த வித்து குட்டிய புலத்தில் விழுந்து இன்று ஒரு விருட்சமாக வளர்ந்து இருக்கின்றது. அன்று உண்டான விசுவாசமே இன்று வரை உயர்ந்து நிற்கின்றது. யாரும் எதும் செய்ய வினைந்து நிற்கும் போது அதனை பெருகச் செய்வார் இயேசு கிறிஸ்து இரட்சகரே.

இன்று இந்த ஆசி உரையை நான் எழுதுவதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன். ஏனெனில் தரிசனம் வளர்கின்றதே. இது இன்னும் வளர்ந்து இலங்கையின் தேசிய மட்டத்தில் சாதனைகளை படைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

நமது இரட்சகரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசிக்கின்றேன்.


இயேசுக்கிறிஸ்துவின் பணியில்
ஜோயல்.டேவிற்குமார் இரட்ணம்
றெயின்போ தேவாலயம்
உடுவில்.

# கவியால் வாழ்த்துகின்றோம்

"குட்டியப்புலத்துக் கிராமத்தின் மத்தியில்
கட்டினான் கல்விக்கூடமொன்றை-இட்டமுடன்
நாட்டினான் தன் புகழை கல்லாசான் "ஜோன் கென்றி"
ஊட்டினான் கல்வி அறிவு"
"தொட்டெனத் தூறும் மனற்கேணி மாந்தருக்கு
கற்றெனத்துறும் அறிவு" என்று
தெற்றென விளக்கும் செந்நாப்போதரின்
பொய்யா மொழியாம் திருக்குறள் தன்னை
மெய்யாய் ஆக்கிடவந்த எங்கள் செம்மல்
"ஜோன் கென்றி" என்னும் நல்சீராசான்
நம்மிடை தோன்றி நற்பணி பேணி
"சிறுபாண்மை மகாசபை" யதில் சேர்ந்தே
சமூக சேவைகள் செய்த நல்லாசிரியன்
அதன் பயனாம் அழகிய விவசாயக் கிராமமாம்
குட்டிய புலத்தின் மத்தியில் நல்ல
அறிவு புகட்டும் கல்விக்கூடமாம்
நிமிர்ந்தே நிற்கும் பாடசாலையொன்றினை
கிராம மக்களின் ஒத்துழைப்பும் இ உதவியோடும்
நிறுவிய "நிறுவுநர்" முதல் அதிபருமமாய்
உயர்ந்த மனிதனாம் "ஜோன் கென்றி"' எனும் நாமம்
நின்றே என்னும் நிலைக்கும் நீடு வாழி வாழி

நா.முத்துகுமார்
குட்டியப்புலம்

## வாழ்த்துச்செய்தி



யாழ் குடா நாட்டில் குட்டியப்புலம் என்னும் சிறிய கிராமத்தின் மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான எவ்வித சூழலோ வசதியோ இல்லாத நிலையில் அதற்கான ஏற்பாடுகளை ஏற்படுத்துவதில் பல தடவைகள் தோல்வியுற்ற ஊர் மக்களுக்கு 1958ஆம் ஆண்டு அவ்வூரைச் சேர்ந்த அமரர் ம.பொன்னுவின் உதவியுடன் அமரர் ஜோன் கென்றி இப்பாடசாலையை ஸ்தாபித்து இங்குள்ள மாணவர்களுக்கு சொந்த ஊரிலேயே கல்விக்கான கலங்கரை விளக்கை ஏற்றி வைத்தார்.

அமரர் ஜோன்.ஹென்றி அவர்கள் பாடசாலையை ஆரம்பித்து அதன் தலைமை ஆசிரியராக இருந்து மாணவர்களை அறிவியல் ரீதியாக வளர்ச்சியடையச் செய்தார். இவரின் முயற்சியினால் அன்று உருவாக்கப்பட்ட பாடசாலை இன்று யாழ் குட்டிப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எனப் பெயர் கொண்டு கல்விப்பணியில் அறுபது ஆண்டுகள் பூர்த்தி செய்யும் இவ்வேளையில் அமரர் ஜோன்.கென்றி அவர்களின் அர்ப்பணிப்பு நிறைந்த சேவை இன்றுவரை எனது உள்ளத்தில் நிறைந்துள்ளது.

இவர் பாடசாலையை உருவாக்கிய காலங்களில் இவருடன் பணியாற்றி இப்பாடசாலையில் ஆசிரியராக கடமையேற்று இப்பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் நானும் பங்காற்றி உள்ளமையை இட்டு மிகவும் பெருமை கொள்கிறேன்.

இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடைந்து பல ஆண்டுகள் கல்விப்பணியாற்ற வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

திரு.நாகமுத்து தம்பித்துரை
(முன்னாள் ஆங்கில ஆசிரியர்)
(கனடா)

## ஸ்தாபகரின் பிள்ளைகளின் வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்தின் விவசாயக் கிராமமான குட்டியப்புலத்தில் 1958ஆம் ஆண்டு பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் மாணவர்களின் கல்வி விருத்திக்காக எமது தந்தையாகிய அமரர் ஜோன்.கென்றி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட யா/ குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையானது இன்று அறுபதாவது ஆண்டு நிறைவினை கொண்டாடுவதையிட்டு நாங்கள் பெருமிதமடைகின்றோம்.

தனித்து நின்று ஒரு பாடசாலையை உருவாக்குவது என்பது இலகுவான விடயமல்ல. இச்சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையினை உருவாக்குவதில் எம் தந்தையோடு தோள் கொடுத்து உதவிய சகலரையும் நினைவு கூறுகின்றோம். அத்தோடு எதிர்வந்த ஒவ்வொரு சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது தந்தை இப்பாடசாலையை உருவாக்கி குட்டியப்புலம் பிரதேச மாணவர்களின் வாழ்வுக்கு ஒளியேற்றி இப்பாடசாலையின் ஸ்தாபகராகவும், முதல் அதிபராகவும் இருந்ததை இட்டு பெருமகிழ்வடைகின்றோம். பாடசாலை ஆரம்பம் முதல் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களை இந்நேரத்தில் நினைவு கூர்ந்து அவர் தம் சேவைக்காக தலை வணங்குகின்றோம்.

தற்போது இப்பாடசாலையின் மாணவர்கள் ஒவ்வொருவரையும் நற்பிரஜையாக, சிறந்த கல்வியாளராக ஆக்க அயராது பாடுபட்டு செயற்பட்டு வரும் அதிபர் வைத்திலிங்கம் விஜயபாஸ்கர் அவர் தம் ஆசிரியர் குழாமுடன் அர்ப்பணிப்புடனான சேவை மென்மேலும் தொடர வாழ்த்துக்ளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று குட்டியப்புலத்தின் ஒளி விளக்காக மிளிரும் இப்பாடசாலையானது இனி வரும் காலங்களிலும் பல்வேறு சாதனைகளிலும் தனது பெயரை நிலைநாட்டி உயர் பாடசாலையாக திகழ வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறோம்.

கென்றி ஜெயகுலராஜா
கென்றி மகிழ்ராஜா, கென்றி ஜெபராஜா
கென்றி மனோராஜ், நியூட்டன் கில்டா



அதிபர்

திரு.வைத்திலிங்கம் வியஜபாஸ்கர்

B.com (Hons), PGD.Ed, M.Ed, M.Phil.in Ed, PGDEM, SLPS.II

# அதிபரின் உள்ளத்திலிருந்து....

இன்று அறுபது ஆண்டுகள் கல்விப்பணியில் நிலைத்து தனது வைரவிழாவைக் கொண்டாடுகின்ற எமது பாடசாலையின் வைரவிழாச்சிறப்பிதழுக்கு பாடசாலையின் பதின்மூன்றாவது அதிபராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கின்ற வகையில் இவ்வாழ்த்துச்செய்தியை வழங்குவதற்கும் விழாவைத் தலைமைதாங்கி நடத்துவதற்குக்கிடைத்த வாய்ப்பையிட்டும் பெரும் மகிழ்வடைகிறேன்.

வயாவிளான் என்னும் பெருமைசேர் ஊரின் பகுதிகளான திடற்புலம், நவற்கிரி, கோணாவளை, செல்வநாயகபுரம், சுதந்திரபுரம், குட்டியப்புலம் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த பிள்ளைகளின் கல்விக்கு ஆதாரநிலையமாக இப்பாடசாலை உள்ளது. தமிழர் பிரதேசங்களை நிர்மூலமாக்கிய யுத்தத்தின் பாதிப்புக்களுக்கு சான்றான பொருளாதார இழப்புக்களுடன் அதிகஸ்டப்பிரதேசப் பாடசாலை என்ற அடையாளப்படுத்தலுடன் பாரிய வளப்பற்றாக்குறைவுடன் நீண்டகாலமாக நிரந்தர அதிபர் இல்லாத நிலையில் இயங்கிக்கொண்டிருந்த இப்பாடசாலையில் 2012 கார்த்திகை மாதம் கடமையேற்றேன். இன்றுவரை தமது இயலளவின் உச்சமட்டத்தில் இப்பாடசாலையின் விருத்தியில் ஆர்வத்துடன் செயற்படுகின்ற ஆசிரியர் குழாத்தினுடைய ஒத்துழைப்பும், சமூகநிறுவனங்கள், அரசாங்க அமைப்புகளின் உதவியும் இன்று பாடசாலைச் செயற்பாடுகளை சீரமைத்து திருப்தியுடன் இயங்கும் நிலைக்கு மேம்படுத்தியுள்ளன. 2013 இல் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைத்தொகுதியின் கீழ்மாடியும், மறுசீரமைக்கப்பட்ட ஆரம்ப பிரிவுக் கட்டடத்தொகுதியும் ஓரளவு இடநெருக்கடிக்கு தீர்வு தந்தமையால் மரங்களின்கீழ் நடத்தப்பட்டு வந்த வகுப்புக்கள் வகுப்பறைகளுக்கு நகர்த்தப்பட்டன.

இப்பாடசாலையின் பௌதிகவளவிருத்திக்கு வெளிஅமைப்புக்கள் வழங்கியுள்ள பேருதவிகள் நினைவிற் கொள்ளப்படவேண்டியன. இலங்கை விமானப்படை பலாலித்தள பிரிவும் அமெரிக்க விமானப்படையினரும் இணைந்து "பசுபிக்ஏஞ்சல்" திட்டத்தினூடாக இரண்டு தடவைகள் பாடசாலையின் அனைத்துக் கட்டடங்களையும் பழுதுபார்த்து வழங்கியுள்ளனர். பாடசாலை முழுவதும் மூன்று தடவைகள் வர்ணம் பூசப்பட்டுள்ளதுடன் மலசலகூடங்கள், குழாய்நீர், மின்விநியோகம் என்பனவற்றையும் பலதடவைகள் செப்பனிட்டுத் தந்துள்ளனர். ஆசிரியர்களுக்கான மோட்டார் சைக்கிள் நிறுத்துமிடம், பாடசாலை சுற்றிய முட்கம்பி வேலி, ஆசிரியர் தங்குமிடம் திருத்தி மின்சார வசதி ஏற்படுத்தியமை, கனிஸ்ட இடைநிலை வகுப்புகளின் மண்டபத் திருத்தம், ஆசிரியர் பொது அறை அலுமாரிகள் பொருத்தியது மாணவர்களுக்கு இலவச கொப்பிகள்

எழுதுகருவிகள் சப்பாத்துகளுக்கான வவுச்சர்கள் பாடசாலை புத்தகப்பை என பல பொருள் உதவிகளுடன் 4 நாட்கள் தென்பகுதிக்கு 120 மாணவர்கள், ஆசிரியர்களையும் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கான ஒழுங்கு செய்து வழங்கியிருந்தார்கள். இவ்வூரின் கைலைவாசன் குடும்பத்தார் நன்கொடையாக பாடசாலையின் சரஸ்வதி சிலையும், குழாய்க்கிணறும் அமைக்கப்பட்டது. ஏனைய அரச தனியார் நிறுவனங்களின் உதவியுடன் பாடசாலை தண்ணீர்தாங்கி நீர் விநியோகம் கைகழுவும் தொட்டிகள் வாயிற் சுவரும் பாடசாலை பெயர்ப்பலகையும் அமைக்கப்பட்டது.

தற்பொழுது புதிய கட்டிடத்தின் மேல்மாடி மண்டபமும் புதிய கணினி அறையும் நூலகமும் நிர்மாணிக்கப்படுவதற்கு UNICEF அனுசரணையுடன் பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. பாடசாலையின் ஆசிரிய வளத்தை குறைவிலாது வழங்குகிற வலயக்கல்விப்பணிப்பாளர் இப்பாடசாலையில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவதை இவ்விடத்தில் நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

பாடசாலையின் மிக அவசிய வேலைகள் இன்னும் நீண்டு செல்கிறது. விளையாட்டுத்துறையை மேம்படுத்த ஆசிரியர் மாணவர் வளம் இருந்தும் பொருத்தமான மைதான வசதிகளோ தளபாட வசதிகளோ கிடைக்கவில்லை. ஊட்டற் பிரதேச பொருளாதார நலிவு நிலையின் பாதிப்புகளை பாடசாலை அனைத்துப் பரிமாணங்களிலும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் எதிர்காலத்தில் சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இன்று இந்த விழாவை இவ்வகையில் ஒழுங்கமைப்பதற்கு இப்பாடசாலையின் நிறுவுநர் குடும்பம் வழங்கிவரும் பேராதரவே காரணமாகும். இவ்வைரவிழா சிறப்பு மலரை வெளியிடுவதற்கும் அதே போல இவ்வருடம் தொடக்கம் ஆண்டு தோறும் நிறுவுநர் நினைவுப் பரிசளிப்பு விழாவை கொண்டாடுவதற்கும் தொடர்ச்சியாக அனுசரணை வழங்குவதற்கும் அவர்கள் முன்வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இவ்வகையில் இப்பாடசாலையின்மீது கரிசனை கொண்டு இற்றைநாள் வரையில் உதவிகளைப் புரிந்த பாடசாலைச் சமுதாயத்தினர் அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

அதிபர்

திரு.வைத்திலிங்கம் விஜயபாஸ்கர்

# ஆசிரியர் குழாம்



**இடமிருந்து வலம் இருப்போர்:-** திருமதி.க.விக்னேஸ்வரன், திருமதி.சி. ஸ்ரீபரன், திருமதி.ஸ்ரீ அமிர்தராஜ், திரு.ஆ.குகனேசன் திரு.ச.இராசலிங்கம், திரு.வை.விஜயபாஸ்கர், திரு.கே.சுரேஸ்.திருமதி.ப.என்சிலிருக்மன், திருமதி.ம.சுதாகரன், திருமதி.த.சிவனேசன்

**இடமிருந்து வலம் நிற்போர்:-** திரு.பொ.சசிரூபன், திரு.ஆ.தயாளன், திரு.கா.சிவரஞ்சன், திருமதி.அ.ஜெ.வேதநாயகம், திருமதி.உ.அருட்குமரன், திருமதி.ந.இடபாரூடன், செல்வி:- சோபிதா.த, திருமதி.ப.குலநாதன், திருமதி.கோ.சரவணபவன் திருமதி.ச.குணசிங்கம், திரு.த.தர்மகுலசிங்கம், திரு.அ.தயாநிதி, திரு.அ.அஜந்தன்.

## தற்போது பணியாற்றும் ஆசிரியர் விபரம்

| | பெயர் | வகுப்பு | தொழில் தகமை | கல்வித்தகைமை |
|---|---|---|---|---|
| 1 | திரு.வை.விஜயபாஸ்கர் - அதிபர் | 2 | கல்விமுதுமானி | B.COM(Hons) |
| 2 | திரு.ச.இராசலிங்கம் - ஆசிரியர் | I | பட்டப்பின் கல்வி டிப்ளோமா | B.A |
| 3 | திரு.கெ.சுரேஸ்- ஆசிரியர் | 2.I | கல்விமாணி | G.C.E A/L |
| 4 | திருமதி.ம.சுதாகரன்- ஆசிரியர் | 2.I | பட்டப்பின் கல்வி டிப்ளோமா | B.B.A |
| 5 | திரு.அ.தயாநிதி- ஆசிரியர் | 2.I | பயிற்றப்பட்ட ஆசிரியர்(வர்த்தகம்) | B.COM |
| 6 | திருமதி.ப.என்சிலிருக்மன்- ஆசிரியர் | 2.II | | B.F.A |
| 7 | திரு.த.தருமகுலசிங்கம்- ஆசிரியர் | 2.II | பயிற்றப்பட்ட ஆசிரியர்(விவசாயம்) | G.C.E A/L |
| 8 | திரு.ஆ.குகனேசன்- ஆசிரியர் | 2.II | பயிற்றப்பட்ட ஆசிரியர்(விஞ்ஞானம்) | G.C.E A/L |
| 9 | திருமதி.ச.குணசிங்கம்- ஆசிரியர் | 2.II | பட்டப்பின் கல்வி டிப்ளோமா | B.A(HONS)Tamil |
| 10 | திருமதி.கோ.சரவணபவன்- ஆசிரியர் | 2.II | தேசிய கல்வி டிப்ளோமா கல்விமானி | G.C.E A/L |
| 11 | திருமதி.சி.ஸ்ரீபதன்- ஆசிரியர் | 2.II | தேசிய கல்வி டிப்ளோமா | B.A |
| 12 | திருமதி.ப.குலநாதன்- ஆசிரியர் | 2.II | தேசிய கல்வி டிப்ளோமா கல்விமானி பட்டம் | B.A, PGDE |
| 13 | திரு.ஆ.தயாளன்- ஆசிரியர் | 2.II | தேசிய கல்வி டிப்ளோமா (கணிதம்) | G.C.E A/L |
| 14 | திருமதி.உ.அருட்குமரன்- ஆசிரியர் | 2.II | தேசிய கல்வி டிப்ளோமா(விஞ்ஞானம்) | G.C.E A/L |
| 15 | திருமதி.க.விக்னேஸ்வரன்- ஆசிரியர் | 2.II | | B.A |
| 16 | திருமதி.ஸ்ரீ.அமிர்தராஜ்- ஆசிரியர் | 2.II | | B.FA |
| 17 | திரு.கா.சிவறஞ்சன்- ஆசிரியர் | 3.I | பயிற்றப்பட்ட ஆசிரியர் (சைவசமயம்) | G.C.E A/L |
| 18 | திருமதி.அ.ஜெ.தேவநாயகம்- ஆசிரியர் | 3.I | பயிற்றப்பட்ட ஆசிரியர் (கத்தோலிக்கம்) | B.A |
| 19 | திருமதி.ந.இடபாரூடன்- ஆசிரியர் | 3.I | பயிற்றப்பட்ட ஆசிரியர் (தமிழ்) | B.A |
| 20 | திரு.அ.அஜந்தன்- ஆசிரியர் | 3.I | பயிற்றப்பட்ட ஆசிரியர் (P.T) | G.C.E A/L |
| 21 | திரு.பொ.சசிரூபன்- ஆசிரியர் | 3.I | | B.A |
| 22 | செல்வி.த.சோபிதா- ஆசிரியர் | 3.I | | B.SC(HONS) |
| 23 | திருமதி.த.சிவநேசன்- ஆசிரியர் | 3.II | பயிற்றப்பட்ட ஆசிரியர் (ஆரம்பக்கல்வி) | G.C.E A/L |

# சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர் விபரம்

## கா.பொ.த சாதாரணதரம்

**2016**

| | |
|---|---|
| நிருபா ஆனந்தராஜா | 5A B 2C S |
| ஜெயக்குமார் கனிஸ்ராஜ் | 3A 4B C w |
| மனோகரன் றஜிந்தன் | 3A 2C 2S |
| மகாராசா தரங்கன் | A 2B 3C 2S |
| கிருபானந்தன் சோபிதன் | A 2C 4S |
| ரவீந்திரன் டஜிசியன் | 4C 3S |
| திசா தயாபரன் | 4B 2C 2S |
| கௌசல்யா ராசதுரை | 3C 3S |
| அட்சாயினி பாலகிருஸ்ணன் | 4C 4S |

**2015**

| | |
|---|---|
| ஜெலன்யா ஜெயசிறி | 4A B3 CS |

**2014**

| | |
|---|---|
| இலங்கநாதன் மோகன்றாஜ் | 2A 3C 2S |

**2013**

| | |
|---|---|
| வெனுஷா வேலுமயிலும் | 2A 3B C 4S |

**2012**

| | |
|---|---|
| கரணாதரன் பானுஜன் | 2A 2B 2C 2S |
| சிவராசா சிவனுஜன் | 2A 2B 2C 2S |



முகாமைத்துவக் குழு



மலர்க் குழு



மேலத்தேய இசை அணி



சாரணர் அணி

# பாடசாலை வரலாறு

இலங்கையின் மணிமுடிபோல் விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் வடபால் வலிகாமம், வலிகாமம் வடக்கின் செழிப்பான செம்மண் பிரதேசத்தை உள்ளடக்கிய கவிஞன் கல்லடிவேலன் அவதரித்த கிராமமாம் வயாவிளான். இக்கிராமத்தின் கிழக்கே குட்டியப்புலம் எனும் வளம் மிகு சிற்றூரில் இன்று கம்பீரமாக காட்சியளிக்கும் கல்விச்சாலையாகும் யா/குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையாகும்.

குட்டியப்புலம் கிராமத்தின் பெரும்பாலானோரின் சீவனோபாயமாக விளங்குவது விவசாயமாகும். அக்காலத்தில் இங்கு விளைச்சலான உப உணவுப் பொருட்களின் பெரும்பகுதி தென்பகுதிக்கு அனுப்பப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

செழிப்பான மண்ணில் சிறப்பாக வாழ்ந்த நம்மவர்க்கு அறிவுப் பசியைத் தீர்ப்பதற்கு அக்காலத்தில் இங்கு ஒரு கல்விச்சாலை இல்லாமையினால் பல மைல்கள் தூரத்தே இருந்த பாடசாலைகளுக்கு சிரமங்கள் மத்தியில் தடைகளைத் தாண்டி சென்று கல்வி பயில வேண்டியிருந்தது. இவற்றையெல்லாம் எதிர் கொண்டு சிலரே இங்கிருந்து சென்று கல்வி பயின்றனர்.

தமது சந்ததியாயினும் சொந்த ஊரிலேயே கல்விபயில ஒரு கல்விச்சாலை தேவை என உறுதி கொண்டவர்கள் பல தடவைகள் உருவாக்கத்திற்கான முயற்சியில் ஈடுபட்ட போதும் அவ் முயற்சியானது சிதைக்கப்பட்டது. எனினும் பாடசாலையினை உருவாக்க வேண்டும் என்னும் வேணவா சிலரிடம் வேட்கையாக இருந்தது.

இக்காலப்பகுதியில் தென்னிலங்கையில் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்த திரு.ஜோன் கென்றி அவர்கள் 1958 ஆம் ஆண்டில் தனது ஊரான மானிப்பாய்க்கு வந்தவர் யாழ்ப்பாணத்தில் பாடசாலை இல்லாத பிரதேசத்தில் ஒரு பாடசாலையை உருவாக்கி தனது கல்விப் பணியினை தொடர ஆவல் கொண்டவராய் குட்டியப்புலத்தின் மூத்த சமூக சேவையாளராக இருந்த திரு.மா.பொன்னுவுடன் தொடர்பு கொண்டு இங்கு பாடசாலையொன்றை உருவாக்கும் எண்ணத்தை விளக்கினார். இவர்களுடன் திரு.நாகமுத்து ஆறுமுகம் ஆகியோர் இணைந்து பாடசாலையின் உருவாக்கப் பணியில் ஈடுபட்டனர்.

பாடசாலையை நிறுவுவதற்காக தற்போதைய பாடசாலையில் 32 பரப்பு விஸ்தீரணம் கொண்ட நிலத்தினை திரு.நாகமுத்து முதலி, இவரது மைத்துனன் ஆகிய திரு.கதிரன் சிங்கன் ஆகியோர் அன்பளிப்பாக உவந்தளித்தனர்.

வழங்கப்பட்ட நிலப்பரப்பில் பாடசாலையின் ஸ்தாபககர்த்தா திரு.ஜோன் கென்றி, திரு.ம.பொன்னு, திரு.ந.ஆறுமுகம் ஆகியோர் தமது சொந்த பணத்தில் பாடசாலைக்கென கொட்டகை போடுவதற்கான பொருட்களான கிடுகு, மரம் என்பவற்றை மானிப்பாயில் பெற்று நாகமுத்து என்பவரின் பார ஊர்தியில் ஏற்றி வரப்பட்டது. ஊர் மக்களின் உடலுழைப்பினால் பாடசாலைக்கான முதலாவது கொட்டகை 1958ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் பாடசாலையில் பதினைந்து வரையான மாணவர்கள் கல்வி பயின்றனர். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் தலைமை ஆசிரியராக திரு.ஜோன்.கென்றி அவர்கள் மட்டுமே இருந்து கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். தொடர்ந்த நாட்களில் பல பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் நிலை ஏற்பட்டது. இதனால் மாணவர்கள் தொகையும் அதிகரித்தது.

அத்தோடு நின்று விடாது மேலும் பாடசாலையின் வளர்ச்சியின் பொருட்டு திரு.ஜோன்கென்றி திரு.ம.பொன்னு ஆகியோர் தமிழ் மகா சபையின் உதவியுடன் செயற்பட்டதன் பயனாக 1958ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ஆம் திகதி யா/ குட்டிப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்னும் நாமம் சூட்டப்பட்டு அரச அங்கீகாரம் பெற்றது. இக்காலப்பகுதியில் திரு.ஜோன்கென்றி அவர்களை தலைமை ஆசிரியராகக் கொண்டு திரு.நா.தம்பித்துரை, திரு.சின்னத்தம்பி , ஆசிரியை தங்கமுத்து, திரு.சீனியர், திரு. மதி மணிவர்ணம் ஆகியோர்க்கு அரச ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டு பாடசாலை ஐந்தாம் வகுப்பு வரை விஸ்தரிக்கப்பட்டது.

1959ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாணவர் வரவு அதிகரிப்பு காரணமாக ஏற்கனவே போடப்பட்ட கொட்டகை மக்களின் உதவியுடன் விஸ்தரிக்கப்பட்டதுடன் பாடசாலைக்கான முதல் கட்டிடம் கட்டப்பட்டு பாடசாலையில் கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் போது பாடசாலையின் ஸ்தாபகரும் தலைமை ஆசிரியருமாகிய திரு.ஜோன்கென்றி அவர்கள் 1960ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

1960ம் ஆம் ஆண்டு திரு.தர்மலிங்கம் அவர்கள் பாடசாலையின் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்று செயற்பட்ட காலங்களில் மாணவர் தொகை இன்னும் அதிகரிப்பு காரணமாக வகுப்புகள் விஸ்தரிப்பால் இடப்பற்றாக்குறை ஏற்பட அரசினதும் பெற்றோரினதும் உதவியும் ஒத்துழைப்புடன் போடப்பட்ட கொட்டகை மேலும் விஸ்தரிக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் திறம்பட நடைபெற்று வந்தது.

1961ஆம் ஆண்டு திரு.தர்மலிங்கம் அதிபர் ஓய்வு பெற கொக்குவில், கலட்டியைச் சேர்ந்த திரு.சின்னத்தம்பி அவர்கள், அதிபர், பொறுப்பை ஏற்று செயற்படும் காலத்தில் கல்வித் திணைக்களத்தின் உதவியுடனும், பெற்றோர்களின்

ஒத்துழைப்புடனும் 80'x20' கட்டடம் அமைக்கப்பட்டது. (தரம் ஐந்து வரை வகுப்புக்கள் நடைபெற்றன) இவர் காலத்தில் திரு.நா.ஆறுமுகம், திரு.மா.பொன்னு ஆகியோர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் இருந்து பாடசாலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர்.

1967ஆம் ஆண்டு திரு.சின்னத்தம்பி அதிபர் ஓய்வு பெற சூராவத்தை, சுன்னாகத்தைச் சேர்ந்த திரு.க.சிவபாதம் அதிபர் பொறுப்பை ஏற்றுச் செவ்வனே நடாத்தி வந்தார். இவர் காலத்தில் 1970ல் அதிபர் விடுதி கட்டப்பட்டது. இவ்விடுதியானது கல்வித் திணைக்களத்தாலும், பெற்றோர் களின் ஒத்துழைப்பாலும் கட்டிமுடிக்கப்பட்டது.

இங்கே கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. இதனால் ஆசிரியர்கள் இப்பாடசாலையில் கடமையாற்ற விரும்பவில்லை. இது ஆசிரிய வளம் குறைந்த ஓர் பாடசாலையாகும். இதன் காரணமாக கஷ்டப் பிரதேசப் பாடசாலையாக இப்பாடசாலையை அரசாங்கம் பிரகடனப்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

1972ல் திரு.க.சிவபாதம் அதிபர் ஓய்வு பெற நல்லூரைச் சேர்ந்த திரு.முருகேசு அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவர் காலம் பற்றிய மேலதிக தகவல்கள் எமக்குக் கிடைக்கவில்லை. (1975ல் திரு.க.முத்தையா அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவர் காலத்தில் கல்வியிலே ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டது.

1984ல் திரு.க.முத்தையா அவர்கள் ஓய்வு பெற 14.10.1984ல் வயாவிளானைச் சேர்ந்த திரு.மு.வடிவேலன் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றார். அவரது காலம் இப்பாடசாலை வரலாற்றில் "பொற்காலம்" என்று தான் கூற வேண்டும். இவர் பணி பாடசாலைக்குச் சிறப்பைத்தந்தது. திரு.மு.வடிவேலன் அதிபர் அவர்கள் பொறுப்பேற்கும் போது 97 மாணவர்களும் 04 ஆசிரியர்களும் இருந்தனர். இதனை மனமுவந்து பொறுப்பேற்ற அதிபர் பாடசாலை வளர்ச்சியிலே கருத்தூன்றி ஆசிரியர், மாணவர், பெற்றோர்களுடனும் கல்வித் திணைக்களத்துடனும் இணைந்து சிறப்பாகச் செயற்பட்டமையினால் சகல வகையிலும் முன்னிலையடைய வாய்ப்பாக அமைந்தது.

இவர் பொறுப்பேற்ற சில ஆண்டுகளிலே மாணவர் தொகை 250ஐ தாண்டியமையால் வசதி வாய்ப்புக்கள் பற்றாக்குறையாக அமைந்தன. ஆசிரியர், தளபாடம், இடவசதி, என்பவற்றைக் கண்ணுற்ற கல்வித் திணைக்களமும், பொது அமைப்புக்களும், அதிகாரிகளும் வேண்டிய ஒத்துழைப்பு வழங்கி உதவினர். இவர் காலத்தில் 1984ல் கிணறு, அமைக்கப்பட்டது. இவ்வாறான வளர்ச்சிப் பாதையில் 1988ல் கொத்தணி தலைமைத்துவப் பாடசாலையான யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலய கொத்தணி அதிபர் திரு.ஆ.சி.நடராசா அவர்கள்

இப்பாடசாலையின் தேவை கருதி தன்னாலான முழு ஒத்துழைப்பையும் வழங்கி கல்விக்காக முன்னின்று செயற்பட்டவர் என்பது மறக்க முடியாத விடயமாகும்.

பின் தங்கிய, கிராமப்புற ஆரம்ப பாடசாலையாக இயங்கி வந்த எமது பாடசாலை 1988ல் புதிய பரிமாணத்தைப் பெற்றுக் கொண்டது. செவ்வந்தி, துளசி, றோசா, என மூன்று இல்லங்கள் அமைக்கப்பட்டு வெகு விமரிசையாக மெய்வல்லுநர் போட்டிகள் நடாத்தப்பட்டன. பாடசாலைக் கீதம், பாடசாலைக் கொடி, மாணவர் சீருடை, கழுத்துப்பட்டி, பாடசாலைக்குரிய மகுடவாசகம் பொறிக்கப்பட்ட சின்னம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டு வளர்ந்து வரும் பாடசாலையாகத் தன்னை இனங்காட்டியது. இவையனைத்தும் கல்வி வளர்ச்சிக்காகவும், சமூக முன்னேற்றத்திற் காகவும் தன்னையே அர்ப்பணித்து செயலாற்றிய அதிபர் திரு.மு.வடிவேலன் அவர்களையே சாரும்.

கல்வித் திணைக்கள நிதி ஒதுக்கீட்டில் புதிய பாடசாலை மண்டபம் 20'x80' பிரமாணப்படி அமைக்கப்பட்டது. அதன் முன்புறம் 10'x80' விஸ்தீரணமுள்ள விறாந்தை கோணாவளையைச் சேர்ந்த திரு.சி.குழந்தைவேலு அவர்களால் தனது மகன் திரு.சி.குணலிங்கம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது.

இக்காலத்தில் மாணவர் தொகையும் 300ற்கு மேலாக அதிகரித்தது. ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், சங்கீதம், ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதுடன், ஆசிரியர் தொகையும் பதினான்காக உயர்ந்தது. 1987ல் தமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கிராமத்தவர்கள் பங்கு பற்றச் சந்தர்ப்பம் வழங்கும் முகமாக (மூவர் தொண்டர் ஆசிரியர்களாக அனுமதி பெற்று நியமிக்கப்பட்டனர்.) திரு.சி.துரைராசா, செல்வி கை.கிருஸ்ணவேணி, செல்வி. ச.சாந்தினி ஆகியோர் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி பின்னர் அவர்கள் நிரந்தர ஆசிரியர்களாக நியமனம் பெற்று கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை வளர்ச்சியின் பெறுபேறாக பாராளுமன்றப் பிரதிநிதியின் நிதி ஒதுக்கீட்டில் 25'x100' பிரமாணமுள்ள மாடிக் கட்டடம் ஒன்றிற்கான அத்திபாரம் போட்டு, அதனை அமைக்கும் உரிமை அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கபட்டது. பாடசாலைக் காணியைச் சுற்றி பாதுகாப்பு மதில் அமைப்பதற்குத் தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் முன் வந்தது. இலவசமாக சுற்று மதில் அமைத்து தருவதாக வாக்களித்து, அதன் முதற்கட்டமாக 100 பற்கற் சீமேந்து கல், மணல் என்பன அனுப்பப்பட்டு பாடசாலையிலேயே வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறாக பாடசாலை அபிவிருத்தியை முன்னெடுத்துச் செயற்படும் காலகட்டத்தில் நாட்டில் அமைதியற்ற சூழ்நிலை தோன்றியது. எமது பாடசாலை 1990ம் ஆண்டில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து யா/புத்தூர் அ.மி.த.க பாடசாலையிலும், யா/புத்தூர் ஸ்ரீ

சோமஸ்கந்தாக் கல்லூரியிலும் இயங்கி வந்தது. இதனால் முன் கூறப்பட்ட அபிவிருத்தி வேலைகள் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது.

1989ம் ஆண்டு இப்பாடசாலையின் வளர்ச்சியில் மிக முக்கியமான காலம் முதல் முதலாக க.பொ.த(சா.த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு, பரீட்சைக்கு விண்ணப்பிப் பதற்கு கல்வித் திணைக்களத்தின் அனுமதியை எதிர்பார்த்து கொண்டிருந்த வேளை கல்வித் திணைக்களத்தின் அனுமதி கிடைக்காத பட்சத்தில் மாணவர்களின் கல்வி நிலையில் அக்கறை கொண்ட கொத்தணி பாடசாலைகளின் தலைமைப் பாடசாலையாக விளங்கிய யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு.ஆ.சி.நடராசா அவர்கள் தற்துணிவுடன் தனது பாடசாலையுடன் இப்பாடசாலைப் பிள்ளைகளை இணைத்து க.பொ.த (சா/த) பரீட்சைக்கு விண்ணப்பித்து தோற்றி குறிப்பிட்ட மாணவர்கள் சித்தியெய்தினர்.

1991ல் எமது பாடசாலை யா/புத்தூர் ஸ்ரீ.சோமஸ்கந்தாக் கல்லூரியில் இயங்கி வந்தவேளை க.பொ.த.(சா.த) பரீட்சைக்கு விண்ணப்பித்து கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் முதல் முதலாக யா/குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பரீட்சாத்திகளாக மாணவர் பரீட்சை எழுதினர். இவ்வாறான செயற்பாட்டிற்கு வித்திட்ட பெருமை அதிபர் திரு.மு.வடிவேலன் அவர்களுக்கே உரியது.

1992ல் திரு.மு.வடிவேலன் அதிபர் ஓய்வு பெற தொண்டமானாறைச் சேர்ந்த திரு.கி.சிவப்பிரகாசம் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்று யா/ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் செவ்வனே நடாத்தி வந்தார். இக்காலப் பகுதியில் 350 மாணவர்களும் 13 நிரந்தர ஆசிரியர்களும் 4 தொண்டர் ஆசிரியர்களும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

இடம் பெயர்ந்த காரணத்தால் மாணவர்களின் கல்வி நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டதென்பதை உணர்ந்த அதிபர் திரு.கி.சிவப்பிரகாசம் அவர்கள் கல்வித் திணைக்களம். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியை நாடி பாடசாலையின் கல்வி நிலையை உயர்த்துவதில் அக்கறையுடன் செயற்பட்டார். கல்வி நிலையில் படிப்படியாக உயர்வு ஏற்படும் பொழுது நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக 1995ம் ஆண்டு ஐப்பசி மாதம் குடா நாட்டு மக்கள் தென்மராட்சிக்கு இடம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தென்மராட்சியில் யா/மந்துவில் றோ.க.த.க பாடசாலையில் எமது பாடசாலை இயங்கியது. அவ்வேளை எமது இப்பாடசாலை முதன்மைப் பாடசாலையாக இயங்கியது. குடா நாட்டு மாணவர்கள் 700ற்கும் அதிகமானவர்கள் எமது பாடசாலையில் கல்வி கற்றனர். இச்செயற்பாட்டிற்கு காரணகர்த்தாவாக அமைந்தவர் அதிபர் திரு.கி.சிவப்பிரகாசம் அவர்களே ஆவார்.

இக்காலத்தில் அதிபர் வன்னி மாவட்டத்துக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் பிரதி அதிபராக இருந்த திரு.செ.கந்தசாமி அவர்கள் 1996ல் மக்கள் மீளக் குடியேறிய வேளை பாடசாலைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் விட்டுச் சென்ற எமது பாடாசலையின் தளபாடங்கள் ஆவணங்கள் யாவும் எரிக்கப்பட்ட நிலையில் கல்வித் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க எவ்வித ஆவணங்களும் அற்ற நிலையில் 06.05.1996ல் திரு.செ.கந்தசாமி அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

116 மாணவர்களுடன் 2 நிரந்தர ஆசிரியர்களுடனும் 4 தொண்டர் ஆசிரியர்களுடனும் பொறுப்பை ஏற்ற அதிபர் பாடசாலையை சொந்த இடத்திற்கு கொண்டு செல்ல முடியாமையினால் யா/நவக்கரி அ.மி.த.க பாசடாலையில் தரம் 1 தொடக்கம் 09 வரை வகுப்புகள் வைத்து கல்வியை முன்னெடுத்தார். போக்கு வரத்து சீரற்ற நிலையில் பெண் ஆசிரியர்கள் இப்பாடசாலைக்கு வரத் தயங்கி யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கு இடம் மாற்றம் பெற்றனர். இக் காலத்தில் பணியாற்றிய திரு.க.கணபதிப்பிள்ளை திருமதி.ந.குணராசா ஆகிய இரு நிரந்தர ஆசிரியர்களையும் தொண்டர் ஆசிரியர்களான திரு.க.தயாபரன், செல்வி சி.வசந்தா, செல்வி பா.காமினி, செல்வி தா.கௌசலாதேவி ஆகியவர்களையும் பாடசாலைச் சமூகம் மறக்க முடியாது.

கல்வித் திணைக்களத்தின் உதவியுடனும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடனும் பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில் 1997ல் இயங்க ஆரம்பித்தது. அலுமாரிகள், தளபாடங்கள் என்பவற்றைக் கல்வித் திணைக்களம் வழங்கியது. மைதான விஸ்தரிப்பு போன்றவற்றை பெற்றோர் செய்தனர். அப்போது 177 மாணவர்களும் 6 நிரந்தர ஆசிரியர்களும் 7 தொண்டர் ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டனர்.

படிப்படியாக மாணவர் தொகையும், ஆசிரியர் தொகையும் அதிகரிக்கப் பட்டது. 1998ல் மாணவர் தொகை 257ஆக உயர்ந்தது. 10 நிரந்த ஆசிரியர்களும் 2 பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் 7 தொண்டர் ஆசிரியர்களும் சேவையாற்றினர். இடப்பெயர்வினால் ஏற்பட்ட கஸ்ரம் காரணமாகவும் உளவியல் தாக்கம் காரணமாகவும் பின்னடைந்த எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்களின் ஒத்துழைப்பினால் புத்துயிர் பெறத் தொடங்கியது. இக்காலப்பகுதியில் க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றி முதன் முதலாக 03 மாணவர்கள் க.பொ.த (உ.த) வகுப்பிற்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1999ல் மாணவர் தொகை 296ஐ தாண்டியது. வகுப்பறை பற்றாக்குறை நிலவிய போதும் மரங்களிற்குக் கீழே வகுப்புக்கள் வைத்து கற்பிக்கப்பட்டன.

1999ல் பெற்றோர், பழைய மாணவர்களின் வேண்டுகோளின்படி கூட்டத்தீர்மானத்திற்கமைய முன்னைய அதிபர்களின் பெயர்களை இல்ல

விளையாட்டுப்போட்டியின் போது இல்லங்களுக்கு சூட்டுவதென தீர்மானித்து பின்வரும் அதிபர்களின் பெயர்கள் இல்லங்களுக்கு சூட்டப்பட்டன. கென்றி (சிவப்பு நிறம்), சின்னத்தம்பி (மஞ்சள்) தர்மலிங்கம் (நீலம்) ஆகியோரின் நாமங்கள் இல்லங்களுக்குச் சூட்டப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலால் 2000ம் ஆண்டின் மீண்டும் இடம் பெயர வேண்டிய சூழல் ஏற்பட்டது. இந்த வேளை யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் எமது பாடசாலை இயங்கியது. 1988ல் திரு.செல்வரத்தினம் ஆசிரியரால் எழுதப்பட்ட பாடசாலைக் கீதம் நீண்டதாக இருந்ததினால் 2000ம் ஆண்டில் முதன்மை ஆசிரியர் திரு.பொன்.ஸ்ரீவாமதேவன் அவர்களால் தற்போதைய பாடசாலைக் கீதம் எழுதப்பட்டது.

2001 - 2002 காலப்பகுதியில் க.பொ.த (சா.த) பெறுபேற்றில் வருடா வருடம் 4 மாணவர்கள் சராசரியாக உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றனர். 2002ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் செயற்பாட்டறையுடன் கூடிய 02 வகுப்பறைகளைக் கொண்ட கட்டடம் அமைக்கப்பட்டது. இவ்வேலைக்கு பாடசாலை அபிவிருத்தி சங்கமும், பழைய மாணவர் சங்கமும் ஒத்துழைப்பு வழங்கியது.

2005ஆம் ஆண்டில் பாடசாலையில் மிக நீண்டகாலம் நடத்தப்படாது இருந்த பரிசளிப்பு விழா நடாத்தப்பட்டதுடன் பசுமை என்னும் நூலும் வெளியிடப்பட்டது. இதற்கு கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவன் திரு.சு.கணேசலிங்கம் அவர்கள் நிதிப்பங்களிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

அதிபர் திரு.செ.கந்தசாமியின் காலப்பகுதி இப்பாடசாலையின் வளர்ச்சியில் பிரதான இடத்தை வகிக்கின்றது. பௌதீக வளம் மிகப் பற்றாக்குறையாகவிருந்த பாடசாலை படிப்படியாக நிறைவு செய்யப்பட்டு வந்தமை அவரது அயராத முயற்சியால் ஏற்பட்ட செயற்பாடாகும்.

திரு.செ.கந்தசாமி அதிபர் ஓய்வு பெற்ற பின் திருமதி அஜந்தா. லக்ஸ்மன் ஆசிரியை அவர்கள் பாடசாலை முகாமை பொறுப்பை பொறுப்பேற்று செவ்வனவே நடத்தி வந்தார். இப்பாடசாலையில் அதிபர் வெற்றிடமாக இருந்த போது திரு.வைத்திலிங்கம் விஜயபாஸ்கர் அவர்கள் 2012.11.16 ஆம் திகதியில் இருந்து பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் பாடசாலையில் பல அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டார். குறிப்பாக மாணவர் கல்வித்துறையில் கூடிய கவனத்தைச் செலுத்தினார். வகுப்பறைகளை சீர் செய்து வகுப்புக்களை ஒழுங்கு செய்து கல்விசார் நடவடிக்கைகளை சீர் செய்ய வழிகாட்டினார். துறைசார்ந்த ஆசிரியர்களை பாடசாலைக்கு நியமனம் செய்ய பணிப்பாளர்களின் உதவியை நாடினார்.

பெரும்பாலான பாட ஆசிரியர் வெற்றிடங்களை நிறைவு செய்யப்பட்டுள்ளது.. இக்காலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் மாணவர்களது கல்வி அடைவுகளும் உயர்வடைந்து வருகின்றது. இவர் சேவை முதிர்ச்சி ஆசிரியர்களுக்கு முகாமை பொறுப்புக்களை வழங்கி கற்றல் செயற்பாடுகளுக்கு வழிகாட்டினார். 2015 ஆம் ஆண்டில் இவரின் சேவையை பாராட்டி சிறந்த அதிபர் விருதும் வழங்கப்பட்டது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக மாணவர்கள் 70 புள்ளிக்கு மேல் எடுத்து சித்தியடைந்தனர். க.பொ.த(சா.த) பரீட்சையில் கூடிய மாணவர்கள் சித்தி பெற்று அயல் பாடசாலைகளில் கலைப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு, தொழிநுட்பப்பிரிவு போன்ற துறைகளில் கல்வி கற்பதற்கு வழி ஏற்பட்டுள்ளது. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பாடசாலை பல சாதனைகளைப் படைத்துள்ளது.

அதிகஸ்ர பாடசாலையாகவும், வகை 2 பாடசாலையாக உள்ள எமது பாடசாலை ஏனைய பாடசாலைகளோடு ஒப்பிடும் போது பெருமைக்குரியதாக மாற்றப்பட்ட பெருமை இவரையே சாரும். இப்பாடசலையில் இவரது பணி சிறப்பு மிக்கது. கடமையுணர்வும், அர்ப்பணிப்பும் மிக்கவராக மட்டுமன்றி பாடசாலை மீது பற்றுறுதிமிக்கவராகவும் செயற்பட்டு, சமுகத்தவரோடு இணைந்து பாடசாலையை வளர்ச்சியில் கொண்டு செல்கின்றதோடு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியை பெற்று மாணவர் கல்வி வளர்ச்சியிலும் பாடசாலை வளத்தை பெருக்கி வளப்படுத்துவதிலும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றமை பாராட்டத்தக்கது.

அதிபர் திரு.வை.விஜயபாஸ்கர் அவர்களின் காலத்தில் பாடசாலையின் ஸ்தாபகரும் முதல் அதிபருமாகிய அமரர் ஜோன் கென்றி அவர்களது திருவுருவச்சிலை பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டு தற்போதைய வலிகாமம் கல்வி வலயத்தின் பணிப்பாளரான உயர்திரு.செ.சந்திரராஜா அவர்களினால் 2017.03.09 அன்று திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டில் பாடசாலையானது தனது 60வது ஆண்டு நிறைவினையும். நிறுவுனர் தினம், பரிசளிப்பு நிகழ்வினையும் கொண்டாடுகின்றது. தொடர்ந்து வரும் காலங்களிலும் பங்குனிமாதம் ஒன்பதாம் திகதி நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவினை நிறுவுனர் குடும்பத்தினர் பங்களிப்புடன் தொடர்ந்து நடாத்துவதற்கும் அதிபர் ஏற்பாடு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யா/குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை

நிறுவுனர்



அமரர்

திரு.ஜோண் கென்றி

# பாடசாலை உருவாக்கத்தில் உதவிய பெருந்தகைகள்



அமரர்
திரு.மா.பொன்னு



அமரர்
திரு.நா.ஆறுமுகம்



அமரர்
திரு.நாகமுத்து முதலி



அமரர்
திரு.கதிரன் சிங்கன்

# நிறுவுனர் உருவச் சிலை திறப்பு நிகழ்வின் பதிவுகள்...























## யா/ குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பணியாற்றிய அதிபர்கள்

| பெயர் | சொந்த இடம் | பணிக்காலம் |
|---|---|---|
| திரு. ஜோன் கென்றி | மானிப்பாய் | 1958 - 1960 |
| திரு.க. தர்மலிங்கம் | வதிரி | 1960 - 1961 |
| திரு.சின்னத்தம்பி | யாழ்ப்பாணம் | 1961 - 1967 |
| திரு.சிவபாதம் | சுண்ணாகம் | 1967 - 1972 |
| திரு.சி.முருகேசு | நல்லூர் | 1972 - 1975 |
| திரு.சு.முத்தையா | குப்பிளான் | 1975 1984 |
| திரு.மு.வடிவேலன் | வயாவிளான் | 1984 - 1992 |
| திரு.சிவப்பிரகாசம் | தொண்டமானாறு | 1992 - 1995 |
| திரு.செ.கந்தசாமி | நீர்வேலி | 1996 - 2012 |
| திரு.வை.விஜயபாஸ்கர் | அளவெட்டி | 2012 முதல் |

## எனது பாடசாலை



***பாடசாலை ஆரம்பித்த போது 1958இல் இப்பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்ற முதல் மாணவர்களுள் ஒருவரான திருமதி. அன்னப்பிள்ளை மகாலிங்கம் அவர்களின் உள்ளத்திலிருந்து......***

அக்காலத்தில் எமது ஊரில் பாடசாலை இல்லா மையினால் பல மைல்கள் நடந்து சென்று அயல் ஊர்களிலுள்ள பாடசாலைகளிலேயே கற்க வேண்டிய நிலை இருந்தது. குறிப்பாக தற்போதைய வயாவிளான் மத்திய கல்லூரியைக் கூறலாம்.

இவ்வாறு அயல் ஊரில் சென்று கற்பதில் தூரம் காரணமாகவும், மற்றும் தோட்ட வேலைகளில் பெற்றோருக்கு உதவுவதன் காரணமாகவும், வேறு சில சமூக காரணங்களாலும் பல மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை. ஒரு சிலரே எமது ஊரிலிருந்து வெளி பாடசாலைக்கு சென்று கல்வி கற்றனர்.

எமது ஊரிலேயே ஒரு பாடசாலையினை உருவாக்க வேண்டும் என்னும் எண்ணம் ஊரில் சிலரிடம் இருந்தது. ஆனால் அது கைகூடவில்லை.

அக்காலத்தில் எனது தந்தையார் அமரர். பொன்னு தலைமையில் ஓர் பாடசாலையினை உருவாக்க ஊர் மக்கள் ஒன்றிணைந்து சேகரித்த நிதியின் மூலம் எடுக்கப்பட்ட முயற்சி சிலரின் ஏமாற்றுதலால் கை கூடாது போய் விட்டது. இதன் காரணமாக அவர் மனமுடைந்து போயிருந்தார். 1958ஆம் ஆண்டில் ஒரு நாள் எனது தந்தையார் தோட்ட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அவரிடம் கம்பீரமான தோற்றத்துடன் நஷனல், வேட்டி அணிந்தவாறு துவிச்சக்கர வண்டியுடன் ஒருவரை சிலர் அழைத்து வந்தனர். அவரே ஆசிரியர் ஜோன் கென்றி ஆவார்.

கென்றி மாஸ்ரருக்கும் எனது தந்தைக்குமான உரையாடலில் ஆரம்பத்தில் எனது தந்தை ஆவேசமாக சில கருத்துக்களைக் கூறினார். அவர்களது உரையாடல் பாடசாலையொன்றை ஆரம்பிப்பதாகவே இருந்தது. எனது தந்தை ஆவேசமாக கதைக்கக் காரணம் ஏற்கனவே பாடசாலை உருவாக்கும் விடயத்தில் சிலரால் ஏமாற்றப்பட்டதன் விளைவிலாகும். சிறிது நேரத்தின் பின் ஒருவாறு இணைக்கப்பாட்டுடன் உரையாடல் தொடர்ந்தது. இவர்கள் இவருடனும் அமரர்.நா.ஆறுமுகம் அவர்களும் இணைந்து எது ஊரில் பாடசாலை ஆரம்பிப் பதற்கான பணியில் ஈடுபட்டனர்.

சில நாட்களில் எனது தந்தை மற்றும் கென்றி மாஸ்ரர் ஆகியோரால் பார ஊர்தி மூலம் கிடுகு, கம்புகள் என்பன கொண்டு வரப்பட்டு தற்போது பாடசாலை

அமைந்துள்ள வளாகத்தில் பாடசாலைக்கான கொட்டகை போடும் பணி ஆரம்பமாகியது. இதற்கு ஊரில் இருந்த பலரும் இணைந்து பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. பல தடவைகள் எனது அம்மாவினால் போடப்பட்ட தேநீரை எனது அக்காவுடன் சென்று வேலையில் ஈடுபட்டோருக்கு வழங்கிய ஞாபகம் இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கின்றது.

பாடசாலைக்கான கொட்டகை அமைத்து அங்கு படிப்பு ஆரம்பித்த போது கற்ற மாணவர்களில் நானும் ஒரு மாணவியாக கற்கும் வாய்ப்பு கிட்டியது.

பாடசாலை ஆரம்பித்த போது பதினைந்து வரையான மாணவர்களே கல்வி கற்றோம். காலை ஒன்பது அல்லது பத்து மணியளவில் பாடசாலைக்கு வரும் எமக்கு கென்றி மாஸ்ரர் மட்டுமே படிப்புச் சொல்லித்தருவார். அதாவது கொட்டகையினுள் போடப்பட்டிருந்த மண்ணில் எழுத்துக்கள் எழுதப் பழக்குவது, எழுத்துக்களை வாசிப்பது மற்றும் அறிவுரைகளை கூறுவதுவும் அன்றைய ஆரம்ப படிப்பாக இருந்தது.

கல்வி பயிலும் எமக்கு ஆரம்பத்தில் பால், பிஸ்கற். பணிஸ் என்பன வழங்கப்பட்டது. அதனை உண்டு மகிழ்ந்து மண்ணில் கற்றலில் ஈடுபட்டார்கள். 1959இல் சிமெந்திலான முதலாவது கட்டிடம் கட்டப்பட்டு தரம் 5 வரை ஆரம்பிக்கப்பட்டது. நானும் தரம் ஐந்து வரை இங்கு கல்வி கற்று 1963ஆம் ஆண்டில் 6ம் வகுப்பு கற்பதற்கு வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கு சேர்ந்து விட்டேன்.

எனது ஊரில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் முதல் மாணவியாக இணைந்து கல்வி கற்றதனை நினைத்து பெருமை கொள்வதுடன் அக்கால பாடசாலை வாழ்க்கை இன்னும் மகிழ்ச்சியாக நிழலாக என் மனதில் நிழலாடும் இவ் நேரத்தில் பாடசலையை உருவாக்கி எமக்கெல்லாம் கல்வி ஒளியை கிடைக்கப் பெற உதவிய மகான்களையும் இன் நேரத்தில் நினைவில் கொண்டு வணங்குகின்றேன்.

திருமதி அன்னப்பிள்ளை மகாலிங்கம்
அச்சுவேலி.

## சிறப்புக் கட்டுரைகள்

# இந்துக்களின் ஒழுக்கவியலில் சமூகம் சார்ந்தவை

மனிதன் அடிப்படையில் சமுதாய இயல்பைப் பெற்றவன். பலருடன் சேர்ந்து வாழும் தன்மை பெற்றவன். அதனால் மற்றவனின் உரிமையையும் கட்டுப்பாட்டையும் மதிக்க வேண்டியவன் ஆவான். ஆனால் ஒவ்வொரு சமுதாயத்திலும் மனிதர் ஒவ்வொரு வரும் தனிப்பட்ட நலனில் ஈடுபடுவதனால் சமுதாயத்தில் போட்டி, பொறாமை, முதலான ஒத்திசைவற்ற பண்புகள் மேலோங்கி வளர்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தி சமூகச் சமயநிலையை நிலைநாட்டும் பொருட்டே பெரும்பாலான சமுதாயங்கள் அவற்றுக்கு முற்புடைய அரசியல் அதிகார முறையைச் செயல்படுத்துகின்றன.

உலகில் அனைத்து வகையான சமுதாயங்களும் சமுதாய ஒருமைப்பாட்டின் பொருட்டு வழிகாட்டி நெறிகளை ஏற்படுத்தியுள்ளன. இந்த வழிகாட்டி நெறிகள் இருவகைத் தன்மையாக அமைகின்றன.

1. சமூகம் சார்ந்தவை.
2. சமயம் சார்ந்தவை

சமுதாயம் சார்ந்த வழிகாட்டி நெறிமுறைகளாக விழுமியங்கள் (Values) நெறிமுறைகள் (Norms) வழக்கப்பாடுகள் (Mores), குடி வழக்கு (Folkway), வழக்கம் (Custom), பழக்கம் (Habit), சட்டம் போன்றன அமைகின்றன. இந்நெறிமுறைகள் மீறப்படாது இருப்பதற்கு சில வழி முறைகள் இருக்கின்றன. இதனை அரசியல் என்பர்.

சமூக நெறி முறைகளை விளங்கிக் கொள்ளல்

1. விழுமியங்கள்

ஒரு சமுதாயத்தின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும் நடைமுறைக்கும் எவை எவை அவசியம் என்று கருதப்படுகின்றதோ அவையே சமூக விழுமியங் களாகும்.

எவை எவை சமுதாயத்தில் ஆன்மீக நாட்டத்திற்கு அவசியமாகக் கருதப்படுகின்றதோ அவையே சமய அல்லது ஆன்மீகம் சார்ந்த விழுமியங்கள் எனலாம்.

அனைவருக்கும் சமவாய்ப்பு என்பது சமுதாயத்தின் இன்றியமையாத விழுமியமாகக் கருதப்படுகின்றது. சமய பண்பாட்டு விழுமியங்கள் தனி மனித விழுமியங்களில் இருந்து வேறுபட்டது. தனி மனித விழுமியமானது அவர் வாழ்விற்கு எவை அவசியமானவை அவரின் நடைமுறைக்கு அவர் கூறும் அர்த்தங்கள் ஆகியவை சார்ந்து பணம், அதிகாரம், தகுதி போன்றவை தனி மனித விழுமியங்கள் ஆகலாம்.

ஆனால் சமூகவியல்கள் அல்லது சமய பண்பாட்டு விழுமியங்கள் தனிமனிதரைச் சாராமல் அவர் சார்ந்த சமுதாயத்துக்கும் சமய பண்பாட்டிற்கும் பொருத்தமுடையதாய் இருக்கும். அவை சமுதாயத்தினதும் சமயத்தினதும் நடைமுறைகளை மதிப்பிட்டுக் கூறுவனவாக இருக்கும். இது அதற்கான அர்த்தத்தை வெளிப்படுத்துவனவாக இருக்கும்.

உதாரணம் : அறம் செய்தல், நீதிக்குட்படுத்தல், வாய்மை வெல்லுதல், உப்புத்தின்றவன் தண்ணீர் குடிப்பான்.

விழுமியங்கள் எப்பொழுதும் தூய்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

உதாரணம் : நேர்மை, அமைதி, தற்சார்புடைமை, கடவுள் வழிபாடு, ஆன்மீக வாழ்வு,

நாட்டுக்கு நாடு சிறப்பான விழுமியங்களை முதன்மையாகக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

உதாரணம் : ஜப்பான் - அழகு. ஸ்பானியா - வீரம், இந்தியா - ஆத்மீகம்

நெறிமுறைகள்:

மக்களின் நடத்தை முறைகளையும் செயற்பாடுகளையும் முறைப்படுத்தக் கூடிய விதிகளே நெறிமுறைகள் எனப்படும். இவை விழுமியங்களில் இருந்து மாறுபட்டவை. விழுமியங்கள் பெரும்பாலும் கருத்தியல் வடிவம் பெற்றவை. நெறிமுறைகளோ இவற்றைத் தான் செய்ய வேண்டும். இவற்றைத்தான் செய்யக் கூடாது. இவை சரி, இவை தவறு, இவை நல்லவை, அவை கெட்டவை என உறுதிப்படக்கூறி நெறிப்படுத்தும் தன்மை பெற்றது.

உதாரணம் : மாத விலக்குடைய பெண்கள் புனிதச் சடங்குகளில் கலந்து கொள்ளக் கூடாது.

நெறிமுறைகள் சமுதாயத்தை இயக்கும் கட்டுப்பாடுகள் என்பர்.

குடி வழக்கு :- சமுதாயத்தின் அனைவராலும் காணக்கூடிய பொதுவான நடத்தை முறையினை குடிவழக்கு எனப்படும் அதன் சிறப்புத்தன்மைகளாவன.

1. பழக்கத்தால் வருவது
2. சிந்திக்காமல் நிகழக்கூடியது
3. இயல்பால் வெளிப்படுத்துவது
4. அந்தந்த மக்களுக்கு உரியதாகக் காணப்படுவது.

இது பழக்கம் (Habit) வழக்கம் (custom) ஆகியவற்றில் இருந்து மாறுபட்டது. இவை இடத்துக்கிடம் மாறுபடுவன குடிவழக்கு அனைத்துப் பரப்பிலும் பரவிக் காணக்கூடியது.

உதாரணம் :
1. கைகூப்பி வணக்கம் செலுத்துதல்.
2. துக்க காலத்தில் அலங்கரித்துக் கொள்ளாமை
3. பசுவைக் கொல்லாமை
4. தூய ஆடை அணிதல்

வழக்கப்பாடுகள்:

ஒவ்வொரு சமுதாயத்திலும் வழக்கப்பெறும் குடிவழக்குகளில் சில குறிப்பிட்ட அம்சங்கள் இன்றியமையாதவை எனக் கருதப்படும். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1. இதை இதை செய்வதன் மூலம் நல்ல விளைவுகள் (Manners) ஏற்படும்.
2. மதிப்புறு பண்புகள் ஏற்படும்.
3. நல்ல மனிதர் என்ற பெயர் ஏற்படும்.

இது போன்ற பிற பண்புகள் ஏற்படும் என்று செய்தல். சிலகுடிவழக்குகளோடு இவை நல்லவை கெட்டவை பொருள் சேர்ந்து அவை வலுவான கருத்துக்களாக நடத்தை முறைகளாக வடிவம் பெறுபவை வழக்கப் பாடுகள் என்று கூறப்பெறும். உதாரணம் : இது அநியாயம் என்று மதிப்பிடுவது ஒரு வழக்கப்பாட்டின் மீதான கருத்தாகும்.

சில குறிப்பிட்ட பொருட்களை உண்ணக் கூடாதென விலக்கல்

சில சொற்களைப் பேசக்கூடாது என விலக்கல், ஒதுக்கல்.

சுருக்கமாகக் கூறின் வழக்கப்பாடுகள் என்பது நல்லவை, கெட்டவை என்றும் நம்பிக்கையோடு தொடர்புடைய கருத்துக்களையும் செயல்களையும் குறிப்பதாகும்.

சட்டம் :-

பல மரபுச் சமுதாயங்களில் மக்களின் சமுதாய நடைமுறைகளை நிலைப் படுத்துவதற்கும் அவர்களுள் எழும் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கும் நவீன சமுதாயத்துக்கு ஈடாக அதற்கு மேலாக அவர்களிடம் சமுதாய ஒழுங்கு கட்டிக் காக்கப்படுகின்றது. இந்நிலை வழி வழியாக வரும் எழுதப் பெறாத சட்டங்கள் மூலம் செய்யப்படுகின்றது. எனவே அவ்வகைச் சட்டங்கள் மூலம் செய்யப்படுகின்றது எனவே அவ்வகைச் சட்டங்கள் மரபுசார் சட்டங்கள் எனச் சிறப்பித்துக் கூறப் படுகின்றது.

- இவை எழுதப்பெறாது இருப்பதாலோ இயற்பெறாது இருப்பதாலோ இதன் சிறப்புக்கள் குறைந்து விடவில்லை.
- அவை மக்களின் சமுதாய ஒழுங்குக்கு வலுவானவையாகத் திகழ்கின்றன.

உதாரணம் : பிறமனை நயவாமை.

எனவே மக்கள் நெறிமுறைகளைப் பின்பற்றி நடக்க உறுதியான நடவடிக்கை, வழிவகை செய்தால் மட்டுமே சமுதாய ஒழுங்கு நலனும் காக்கப்படும். அதற்காக மேற்கொள்ளப்படும் உறுதிப்பாடும் வழிமுறைகளும் இந்துக்களின் ஒழுக்க வியலாக அமைகின்றன.

திருமதி. தர்சினி சிவநேசன்
ஆசிரியர்.

# இயேசுவின் பிறப்பிலே மறைந்திருக்கும் உண்மைகள்

உலகிலே பிறக்கும் ஒவ்வொருவருக்கும் வரலாறு இருக்கிறது. இவ்வரலாறானது பிறப்பு, வாழ்வு, இறப்பு என்ற மூன்றும் பகுதிகளாகக் காணப்படுகின்றது. ஆனால் கிறிஸ்துவின் வரலாற்றுக்கு மட்டுமே விதிவிலக்கு உண்டு. இவரின் பிறப்பு வித்தியாசமானதாகவும் வேறுபட்டதாகவும் இருக்கிறது.

இயேசு பிறந்த போது இவரின் தனித்துவத்தை மக்களுள் எவரும் அடையாளம் காணவில்லை. இவர்களின் கண்களுக்கு மறைக்கப்பட்டவராகவே பிறந்தார். தனது பகிரங்க வாழ்வைத் தொடங்கும் வரை 30 ஆண்டுகள் இயேசு மறைவாகவே வாழ்ந்தார். திருமுழுக்குப் பெற்ற பின்னரே நசரேத்தூர் இயேசு என்ற அடையாளத்தைப் பெற்றார். இவரின் போதனைகளும் புதுமைகளும் ஏனையவர்களிலிருந்து வேறுபட்டதாகக் காணப்படுவதுடன் எடுத்துக்காட்டாகவும் காணப்படுகின்றது. இவரின் முன்மாதிகையான வாழ்விலனால் பலர் இவரைப் பின்தொடர்ந்தார்கள். இவரோ யூதமதத் தலைவர்களுக்கு பெரும் சவாலாக இருந்தார். இதனால் யூதமதத்தலைவர்களின் வெறுப்புக்கு ஆளானார். இவரை மறைத்து துரோகியாவும், சமூகத் துரோகியாகவும் கருதி இவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். இவரோ தன் இறப்பைக் கடந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுத்தார். இவ் உயிர்ப்பின் பின்னணியில் இவர்தான ஆண்டவராகிய மெசியா என்ற உண்மையை நம்பிக்கையாக வெளியிட்டார்கள். இவரின் உயிர்ப்பின் பின்னரே இவர் சொன்னவைகளையும் செய்தவைகளையும் சிந்தித்தார்கள். இவரின் பிறப்பு, வாழ்வு. இறப்பு, உயிர்ப்பு விண்ணோன்பு என்பன வாய்மொழியாகவும் பின்னர் எழுத்து வடிவாகவும் நற்செய்தியாளர்களால் எழுதப்பட்டது.

லூக்கா நற்செய்தியாளர் இயேசுவின் பிறப்பை ஒரு வரலாற்று நிகழ்வாக பதிவு செய்கிறார். பேரரசன் அகுஸ்துஸ் செசார் ஆட்சியிலிருந்தபோது தன்னாட்சிக்கு உட்பட்ட பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கையை அறிய விரும்பினார். இதனால் கணக்கெடுக்கும்படி உத்தரவிட்டதால் மரியாளும் யோசேப்பும் பெத்தலேகம் சென்ற போதே இயேசு அங்கே பிறந்தார். இதனால் லூக்கா நற்செய்தியாளர் வரலாற்று நூலாகப் பதிவு செய்கிறார். மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவின் பிறப்பின் முக்கிய விடயங்களை பழைய ஏற்பாட்டு முக்கிய சம்பவங்களின் பின்னணியில் சிந்திக்கத்தூண்டுகிறார்.

மத்தேயு இயேசுவின் பிறப்பைப்பற்றி எழுதும்போது வானில் அதிசய நட்சத்திரம் தோன்றியதையும் நட்சத்திரம் என்பது விண்மீனைக் குறிப்பதோடு பெயர் பெற்ற ஒரு தலைவரையும் குறிக்கும். ஈசாய் மரத்தின் அடியிலிருந்து துளிர்வெளிவரும். இது வளர்ந்து கனிதரும் என்ற எசாயா இறைவாக்கினர் குறிப்பிடுகிறார். இத்துளிர் யூதர்கள் எதிர்பார்த்த மெசியா ஆகும்.

சாலமோன் அரசன் ஞானம் நிறைந்தவராக காணப்பட்டமையால் பல அரசர்கள் தூரத்திலிருந்து இவரைப்பார்க்க வந்தவர்கள். அவ்வாறு வரும்போது விலை உயர்ந்த பொருட்களையும் கொண்டு வந்தனர். இவ்வாறு இயேசு பிறந்தபோது மூன்று ஞானிகள் பொன், தூபம், வெள்ளைப்போளம் என்ற விலை உயர்ந்த பொருட்களை பரிசாகக் கொடுத்து மகிழ்ந்தனர். சாலமோனுக்கு பரிசு கொடுத்த நிகழ்வுடன் இந்த மூன்று ஞானிகளையும் ஒப்பிட்டு இயேசுவை புதிய சாலமோனாக காட்டப்படுகின்றது.

எகிப்தில் எபிரேயர் பலுகிப் பெருகியதால் அச்சமுற்ற பாரவோன் அரசன் எகிப்தியரின் ஆண்குழந்தைகள் அனைத்தையும் கொன்று நைல் நதியில் வீச உத்தரவிட்டான். எபிரேயரின் ஒரே ஒரு குழந்தை மட்டுமே தப்பியது. இக்குழந்தைகள்தான் மோசே ஆகும். இதேபோன்று இயேசுவும் மாசில்லாக குழந்தைகளின் இரத்தத்தால் தப்பிப்பிழைக்கும் புதிய மோசேயாவை அறிமுகம் செய்யப்பட்டார்.

திருமதி.அ.ஜெ.தேவநாயகம்
ஆசிரியர்

# பாடசாலையின் மாணவர் மன்றங்கள்



இந்துமா மன்றம்



கிறிஸ்தவ மன்றம்



தமிழ் மன்றம்



சமூக விஞ்ஞான மன்றம்



விஞ்ஞான மன்றம்



ஆங்கில மன்றம்



உடற்கல்வி மன்றம்



நுண்கலை மன்றம்

# இன்றைய சமுதாயத்தில் நல்லொழுக்கச் சீர்கேட்டினைத் தடுப்பதற்கு தகவல் தொடர்பு சாதனங்களின் பொறுப்பு

ஒழுக்கம் என்பது மனிதனிடத்தில் காணப்பட வேண்டிய ஓர் உயரிய பண்பு ஆகும். ஒழுக்கமானது எல்லா மதங்களும் உரைக்கின்ற ஓர் பண்பாகும். இந்து மதத்திலே பண்டைய காலத்தில் ஒழுக்கத்திற்கு என வருணன் என்னும் கடவுளை வணங்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

திருவள்ளுவர் கூட ஒழுக்கத்தினைப் பற்றி ஒரு அதிகாரமே பாடியுள்ளார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்பது ஒழுக்கச் சிறப்பினைத் தருவதால் உயிரை விட மேலானது என்று வள்ளுவர் உரைக்கின்றார்.

இவ் ஒழுக்கமானது பல வகைகளில் கூறப்பட்டுள்ளது. உண்மை நேர்மை நியாயம் என்று பல பொருள்களில் கூறப்பட்டாலும் இவற்றினை விட அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம் என்னும் ஒழுக்கங்கள் கூறப்படுகின்றது. இதனை வள்ளுவர் ஓர் மனிதனுக்கு சால்பு என்னும் ஓர் கட்டிடத்திற்கு மேற்கூறியவை தூண்கள் என்று கூறுகிறார்.

அன்பு நாண், ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மையோடு இயைந்து சால்பூன்றிய தூண் என்று வள்ளுவர் இதனை விளக்குகிறார். இன்றைய காலத்தில் ஒழுக்கமானது. குடும்பத்திலிருந்து பாடசாலை வரைக்கும் பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் பிள்ளைப் பருவத்திலிருந்தே. வளர்ந்தெடுக்கப்பட்டு மாணவர்களை நற்பிரஜைகளாக திகழச் செய்வது தலையாய கடமையாக்கப்பட்டுள்ளது. உண்மை நேர்மை அன்பு அறம் கீழ்ப்படிவு இரக்கம் ஏனையோருக்கு உதவுதல் போன்ற அனைத்து விழுமியப் பண்புகளையும் வழங்கும் வகையில் கல்வி அமைய வேண்டும். மகாத்மா காந்தி கல்வி பற்றிக் கூறும் போது "உடல் உள்ளம் ஆன்மீகம் எனும் மூன்றினாலும் நிலைபெறச் செய்வதே கல்வி" என்கிறார் சுவாமி விவேகானந்தர் கல்வி பற்றி பின்வருமாறு கூறுகின்றார். "முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக்கொள் அப்போது எஜமானாகும் தகுதி தானாகவே உனக்கு வந்து சேரும்" என்கிறார். எனவே கல்வியியலாளர்கள் நாம் அனைவரும் ஒழுக்கமுள்ளவர்களாக வாழவேண்டு மென்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளார்கள். இவ்வாறு கட்டிக்காக்கப்படுகின்ற ஒழுக்கங்கள் மீறப்படுகின்ற போது சீர்கேடுகள் இடம் பெறுவது எமது நாட்டில் சர்வசாதாரணமாகி விட்டது. பொய், களவு, கொலை, பாலியல் வல்லுறவுகள், மது அருந்துதல், போதைவஸ்துகள் போன்ற பல ஒழுக்கச் சீர்கேடுகள் இப்போது நாடெங்கும் இடம்பெறும் ஓர் சாதாரண நிகழ்வாகி விட்டது.

இவ்வாறு நாடெங்கும் ஒழுக்கச் சீர்கேடுகள் நடைபெறும்போது அதனை இல்லாதொழிப்பதற்கு தகவல் தொடர்பு சாதனங்களின் பொறுப்பு இன்றியமையாதது மக்களுக்கு விரைவாக தகவல்கள் சென்றடைய உதவுபவை தொடர்பு சாதனங்கள் ஆகும். அவற்றிலும் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, இணையம் என்பன மக்கள் மனதை வெகுவாக தொட்டுச் செல்பவை ஆகும்.

விரைவாக மக்களுக்கு கருத்துக்களை விளக்குவதில் தகவல் தொடர்பு சாதனங்கள் ஓர் முக்கிய பங்கினை வகிக்கின்றன. பத்திரிகைத்துறை அன்றிலிருந்து இன்றுவரை நல்ல கருத்துக்களை திணிக்கும் ஓர் ஊடகமாகும். இன்று பத்திரிகைகளில் ஒவ்வொரு பக்கத்திலும் சீர்கேட்டின் தழும்புகள் தெளிவாகத் தெரியும். சீர் கேட்டினை எடுத்துக் கூறுகின்ற பத்திரிகைகள் அதனைத் தடுப்பதற்கு நிச்சயமாக முயலவேண்டும். சீர்கேடுகளினால் மனித சமுதாயம் அடைய தீமைகளையும் அதன் விளைவுகளாக சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் தெளிவுபடுத்தும் போதுதான் இவ்வாறான சீர்கேடுகள் நிகழ்வதை தடுக்க முடியும்.

தொலைக்காட்சி, வானொலி போன்றனவும் சமூகசீர்கேடுகளை விளக்கும் ஓர் தொடர்புசாதனங்களாகும். தொலைக்காட்சிகளினால் சமூகச்சீர்கேட்டினால் ஏற்பட்ட சீரழிவுகளைப் படம் பிடித்துக் காட்டுவதில் அதன் பொறுப்பு தங்கியுள்ளது என்பது புலனாகின்றது.

இன்று பெண்கள் மீதான வல்லுறவுகள் அதிகரித்துச் செல்கின்றன. பாரதிகண்ட புதுமைப் பெண் இன்று கண்ணீருடன் அலைகின்றாள். நிமிர்ந்தநன் நடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், நிமிர்ந்த ஞானச் செருக்கும் பெண்களுக்கு வேண்டும் என்று பாரதியார் கூறினார். ஆனால் இன்று பெண்களின் நிலை கவலைக்கிடமாக காணப்படுகின்றது. இந்நிலையினைப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்ற தொடர்பு ஊடகங்கள் மக்களுக்கு தெளிவாக விளங்க வைக்க வேண்டும். இது அவற்றின் கட்டாய பொறுப்பும் கடமையும் ஆகும்.

பத்திரிகை போன்ற எழுத்துருவில் அமைந்த புத்தகங்கள் எல்லாம் வாசகர்களை சிந்திக்க வைக்க வேண்டும். “ஓர் எழுத்தாளனின் பேனா தலை குனிகின்ற பொழுது ஓர் சமுதாயம் தலை நிமிர்கின்றது” என்று கவிஞர் மு.மேத்தா கூறுகின்றார். அதே போல் ஓர் சமூதாயத்தை கட்டியெழுப்புவதற்கு ஊடகங்கள் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். களவு, கொலை, கொள்ளை என்ற ஒழுக்கச் சீர்கேடுகள் தலை விரித்தாடுகின்ற பொழுது அதைப்பற்றிய செய்திகள் எல்லாம் தொடர்பு சாதனங்களில் வெளியிடப்பட்டு இனி மேலும் இவ்வாறான சீர்கேடுகள் நடக்காமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும்.

தகவல் தொடர்புசாதனங்கள் மக்களுடைய மனங்களை ஊடறுக்க வேண்டும். அதன் ஊடாக சீர்கேட்டினை ஏற்படுத்துபவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். ஒருவர் வருந்திந்தாலும் ஒழுக்கத்தைக் காக்க வேண்டும். உயிருக்குத் துணையாக நிற்பது இவ்வொழுக்கமே ஆகும். கற்றதை மறந்தால் மீண்டும் கற்றுக் கொள்ளலாம்.

ஆனால் ஒழுக்கம் தவறினால் தவறியதுதான் என்று இப்படியான ஒழுக்கம் பற்றிய கருத்துக்களை மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும்.

தொலைக்காட்சிகள் சமூக சீர் கேடுகளைப் படம் பிடித்தக்காட்ட முன் வரவேண்டும். உடனுக்குடன் செய்திகளையும் படங்களையும் காட்சிப்படுத்தும் போது தாம் செய்கின்ற தவறுகளை உணர்ந்து திருந்துவதற்கு வாய்ப்புண்டு. சீர்கேடுகளை இல்லாதொழிக்கும் நாடகங்கள், கவியரங்கங்கள், சிறுவர் நிகழ்ச்சிகள், குறும்படங்கள் போன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதன் மூலம் சீர்கேடுகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

"மனிதர்கள் அனைவருமே சிந்திக்கத் தெரிந்தவர்கள், சிந்திக்கத் தெரியாதவன் மனிதன் அல்ல என்று டேக்கார்ட் எனும் அறிஞர் குறிப்பிடுகின்றார். எதிர்காலத்தில் நல்லதோர் சமுதாயம் உருவாக்கப்பட வேண்டுமானால் அதற்கு தொடர்பு சாதனங்கள் பெரும்பங்கு வகித்தால் மட்டுமே முடியும்.

இன்றைய உலகில் கணனி ஓர் முக்கிய இடம் வகிக்கின்றது. கணனித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுவரும் படிப்படியான முன்னேற்றம் காரணமாக தகவல் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் ஓர் மையமாக இணையம் அமைகிறது. ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு தகவல்களை வேகமாகவும் சரியாகவும் அறிய இணையம் உதவுகின்றது. இணையத்தின் மூலம் நல்லொழுக்கக் கருத்துக்களை மக்களுக்கு விரைவில் சென்றடையச் செய்ய முடியும். அதே நேரம் சீர்கேடுகளை விரைவாக வெளி உலகத்திற்கு அம்பலப்படுத்தி ஓர் நீதியான நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும். இன்று ஒவ்வோரிடத்திலும் என்ன நடக்கின்றதோ அது உடனே படங்களாகவும் செய்திகளாகவும் முகநூலிலே உடனுக்குடன் பார்வையிடக் கூடிய வாய்ப்பினை இணையம் ஏற்படுத்தித் தந்துள்ளது.

எனவே பத்திரிகை முதல் நவீன சாதனமான இணையம் வரை நல்லொழுக்க சீர்கேட்டினை தடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். மக்களுக்கு பூரண தெளிவை ஏற்படுத்தவும் சிந்திக்க வைப்பதற்கும் சாதனங்களால் மட்டுமே முடியும் எனவே மனிதனை மனிதனாக வையத்தில் வாழ்வாங்கு வாழ வைப்பதில் இவற்றின் பொறுப்பு தங்கியுள்ளது.

ஆகவே நல்லொழுக்கச் சீர்கேடுகள் பற்றிய ஓர் அறிவினை பெறுவதன் மூலமாக அதனை மேற்கொள்பவர்கள் திருந்திக் கொள்ள முடியும். இவ்வாறு நல்லொழுக்கச் சீர்கேட்டினைத் தடுப்பதற்கு தொடர்பு சாதனங்களின் பெரும் பங்கு பொறுப்பு அவசியமானது என்பது புலனாகிறது.

பதவி என்னும் இலக்கை அடைய
பசித்திரு
தனித்திரு
விழித்திரு

திருமதி.ச.குணசிங்கம்
ஆசிரியர்

# பாடசாலை மட்ட முகாமைத்துவம்: எதிர்பார்க்கும் எதிர் கொள்ளும் சவால்களும்

பொதுக்கல்வித்துறையின் நிலைக்களங்களான பாடசாலைகளின் வினைத்திறன் மேம்பாட்டிற்கான மிக அண்மைக்காலத்தில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட உத்திகளில் பாடசாலைமட்ட முகாமைத்துவம் பிரதானமானது. பொதுக்கல்வித்துறையின் முகாமைத்துவ அதிகாரங்களை பரலாக்கலினூடாக பாடசாலை மட்டச் சுயஆட்சி, நல்லாட்சி, செயற்பாடுகளின் வெளிப்படைத் தன்மை, ஜனநாயாக பண்புடைய அதிகாரங்களும் பொறுப்புக்களும், பங்குபற்றல் முகாமைத்துவம் ஆகியவற்றை பாடசாலைகளில் ஏற்படுத்துவதன் ஊடாக பாடசாலைகளின் செயற்திறனை உச்சப்படுத்தி அபிவிருத்தியை எய்துதல் பாடசாலை மட்ட முகாமைத்துவக் கோட்பாட்டின் நோக்கமாகும்.

"தனியான பாடசாலைகளுக்கு மாவட்ட, மத்திய காரியாலயங் களிலிருந்து தன்னாதிக்கம் நகருகின்ற ஒழுங்கு முறை" என்பார் (கொட்டோன் 1992). "பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ளூர் பங்குதாரர்களுக்கும், கல்வியலாலர்களுக்கும், பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும், சமூதாயத்திற்கும் கூடிய அளவிற்கு அதிகாரத்தை வழங்குதல் பாடசாலை மட்ட முகாமைத்துவமாகும்" (வொல்சென்ரர் 1996).

இவ்வகையான முகாமைத்துவ விரிகைப் பரவலாக்கக் கட்டமைப்பு உலகின் பல்வேறு விருத்தியடைந்த நாடுகளில் வெவ்வேறு பெயர்களில் நீண்டகாலமாக நடைமுறையில் இருக்கின்றது. பாடசாலை மட்ட முகாமைத்துவம், பாடசாலை மட்ட ஆட்சி, பாடசாலைச் சுயமுகாமைத்துவம், பாடசாலைத் தல முகாமைத்துவம் என பலவகை பெயர்களில் இது வழங்கப்படுகின்றது இலங்கையில் பாடசாலை மட்ட முகாமைத்துவம் 1997ம் ஆண்டில் இருந்து நடமுறைப்படுத்தப்பட வேண்டும் என பிரேரணைகள் இருந்த போதும் 2005ம் ஆண்டு இலங்கை கல்வி அமைச்சரால் பரீட்சாத்தமாக அறிமுகப்படுத்தபட்ட "ஒரு முன்னோடி பாடசாலையை மேம்படுத்தல் திட்டம்" என்பதன் ஊடாக ஒரு சில பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது 2006ல் அறிமுகப்படுத்தப்பட்ட மேம்பாட்டுத்திட்டம் (PSI) இன் ஊடாக 8 மாகாணங்களைச் சேரந்த 8 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை மட்ட முகாமைத்துவம் கல்வி அமைச்சின் சுற்று நிரூபம் 2008/35 இன் மூலம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பாடசாலை அபிவிருத்தி சபை (SDC) பாடசாலை முகாமைத்துவ அணி (SMT) என்பவற்றின் உருவாகத்தின் ஊடாக அனைத்து பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. (கால்ட்வெல் 1993) என்பவரின் கருத்துப்படி பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் ஆரம்பத் தோற்றம் தஸ்மானியா என்னும் அது முதலில் விக்ரோரியா மற்றும் நியுசிலாந்துக்கும் பின் ஐக்கியராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் பரவியதாகக் கூறப்படுகின்றது

தனிநபர் பொறுப்பும் வகை கூறல் கடப்பாடும் என்ற நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பாடசாலை முகாமைத்துவத்தை சபைகளினூடாக இயக்குதல், சமூகப்பங்குபற்றலை ஏற்படுத்துதல், பாடசாலைச் சுய ஆதிக்க ஆளுகையை மேம்படுத்தல், அரசாங்க வளங்கள் நிதி அனுசரனையை வழங்கல் என்பன பாடசலைத் தலைமைத்துவத்தை வலுவூட்டும் என எதிர்பாக்கப்பட்டது. இதனூடாக பாடசாலைத்

தலைமைத்துவம் தீர்மானமெடுத்தல், வழங்களைத்திரட்டல், கலைத்திட்ட முகாமைத்துவம் விருத்தியை நோக்கிய திட்டமிடல், நிர்வாகக்கட்டமைப்பேணுதல், பாடசாலை உத்தியோகத்தர் வாண்மை விருத்தி என்பனவற்றில் திறம்படச் செயலாற்ற முடியும் எனக்கருதப்படுகின்றது. தேசிய கல்வி ஆணைக்குழு (NEC) வின் பரிந்துரைகளின்படி கல்வி அமைச்சினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பாடசாலை மட்ட முகாமைத்தவ அமுலாக்கம் பாடசாலைகளின் முகாமைத்துவத்தையும் அமைப்பையும் மேம்படுத்தும் இயல்புகளை சில கோட்பாட்டு எடுகோள்கள் முன்வைக்கின்றன.

1. பாடசாலை மட்ட முகாமைத்துவம் கூட்டுத்தீர்மானம் மேற்கொள்ளல்,ஈடுபாடு, பங்களிப்பு என்பவற்றுக்கு சமுதாயத்திற்கு அதிகாரமளித்தல்.
2. பாடசாலைமட்ட கற்றல் கற்பித்தலை மேம்படுத்தும் பாடசாலை உபாய முன்னெடுப்புக்களில் ஆசிரியர்களும், பாடசாலைச் சமுதாயப் பங்காளிகளும் அதிகளவு கட்டுப்பாட்டைக் கொண்டிருத்தல்.
3. மிகப் பயனுள்ள பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைப்பதன் சவால்கள் குறித்துச் சமூகம் உரையாடலில் ஈடுபடுதலும், இயலுமைக்கேற்ப பங்களிப்புச் செய்தலும்.
4. பாடசாலையிலுள்ள ஆசிரியர் தொழில்வாண்மை விருத்தியும் கல்வி அமைப்பில் கலாச்சார ரீதியான முன்னேற்றமும்.
5. பொருத்தமான கலைத்திட்ட விருத்தியினூடாக மாணவர் சார் கல்வி வெளியீட்டை மேம்படுத்தல்.
6. உள்வாரி ரீதியான கட்டுப்பாட்டை வலுவாக்கலும் வளங்களின் பயன்பாடு பற்றிய சுயதீர்மானத்தினூடாக கற்றல் கற்பித்தல் செயன்முறையின் தரத்தினை மேம்படுத்தல்.

மாணவர்களின் கற்றல் வெளியீடுகளை மேம்படுத்தல் பாடசாலைகளின் இறுதிக்குறிக்கோளாகும். இதற்கு வகைசெய்யும் விதமாக பாடசாலைக் கலாசாரத்தை மீளக்கட்டியெழுப்புதல், ஒழுங்கமைப்பை நிறுவுதல், முகாமைத்துவத்தை பொருத்த மாக்குதல், போன்ற விடயங்களுக்கு பாடசாலை மட்ட முகாமைத்துவம் யதார்த்த நிலை வெற்றிகளை அடைவதில் பல சவால்கள் எதிரெழுந்துள்ளமையை ஆய்வுகள் நிருபிக்கின்றன.

"பாடசாலைமட்ட முகாமைத்துவம் அல்லது சுயமுகாமைத்துவம் என்பதற்கும் மறுபுறத்தில் கற்றல் வெளியீடுகளுக்கும் இடையில் எந்த நேரடி இணைப்பும் தோன்றவில்லை" என (காட் வெல் 1998) குறிப்பிடுகின்றார்.

"மாணவர்களின் கல்விசார் சாதனைகள் குறைவான, இடை விலகல் விகிதாசாரம், அதிகரித்த செலவுகள் மற்றும் குறைந்த ஒழுக்காற்றுப்பிரச்சினைகள் ஆகியவற்றின் வெற்றிகளுக்கும் பாடசாலை மட்ட முகாமைத்துவத்திற்கும் இடையில் ஓர் இணைப்பையும் காண முடியவில்லை" என்கிறார் (ஒஸ் வேல்ட் 1995).

பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் குறிக்கோள்களுக்கும் அடையப்பட்ட வெளியீடுகளுக்கும் ஏன் இணக்கமின்மை நிலவுகின்றது என்பதற்கு பல காரணங்களை ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அவற்றில் முக்கியமானவை:

1) பாடசாலை மட்ட முகாமைத்துவம் மற்றும் அதன் செயற்பாடுகள் பற்றிய விளக்கமின்மை.

பாடசாலை மட்ட முகாமைத்துவம் எவ்வாறு அமுலாக்கப்படுகின்றது என்பது பற்றி சில பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமுதாயத்தினர் முழுமையான தவறான விளக்கங்களைக் கொண்டுள்ளனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மரபு ரீதியான முகாமைத்துவ மாதிரிகளிலிருந்து விடுபட விரும்பாத நிலையும் காணப்படுகின்றது. அதிகாரங்களும் பொறுப்புக்களும் பரவலாக்கப்பட்டதோடு முகாமைச்சபைகள் உருவாக்கப்பட்டிருப்பினும் கூட பாடசாலையின் முழுமையான செயற்பாடுகளுக்கு வகை கூற வேண்டிய தனிப்பொறுப்பு தற்போதும் அதிபர்களையே சார்ந்துள்ளது.இதனால் சகல வகை பாடசாலைச் சபைகளும் அதிபர்களால் இயக்கப்படும் சபைகளாகவே அமைக்கப்படுகின்றன.

2) தீர்மானம் மேற்கொள்ளலில் உள்ள சவால்கள்.

தற்போதுள்ள பாடசாலை ஆளுகை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் முறையானது பங்குதாரர்கள் ஒன்று கூடி இயங்குதல், கூட்டு ஈடுபாடு, மற்றும் பங்குபற்றுதல் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டது எனினும் இவ்வாறான பல்வேறு தரப்பினருடன் பாடசாலை மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதில், பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வதில் பாடசாலை நிர்வாகத்தினரும் ஆசிரியரும் முழுமையான விருப்பத்தை கொண்டிருக்கவில்லை. பெரும்பாலான கூட்டங்களில் அதிபர்களினால் ஏற்கனவே தயார் செய்யப்பட்டு முன்வைக்கப்படும் தீர்மானங்களில் அனைத்துப்பங்குதாரர்களும் ஆமோதிப்பதனையே வழக்கமான நடைமுறையாகக் கொண்டுள்ளனர்.

3) அதிபர்களின் தனியாள் விசேட பண்புகள்.

பெரும்பாலான பாடசாலை அதிபர்கள் பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தை முன்வைப்பதற்கு பாடசாலைப் பங்குதாரருடன் இணைந்து தயாரிக்கப்படும் ஓர் கூட்டு நிகழ்ச்சியை பயன்படுத்துவதற்குப்பதிலாக தமது சொந்த நிகழ்ச்சி நிரலில் செயற்படுவதனையே அதிகம் விரும்புகின்றனர். இதனால் வர்த்தகப்பாங்கிலான முகாமைத்துவ உபாயங்களே பாடசாலைகளில் கையாளப்படும் நிலை காணப்படுகின்றது.

4) கொள்கை ஒழுங்கு விதிகளினுடனான மோதல் நிலை.

கல்வி அமைச்சினுடன் பொதுக்கல்வி நிர்வாக கட்டமைப்புக்களை கையாளும் தாபன விதி ஒழுங்கமைப்பு ஏற்பாடுகளின்படி பாடசாலையை மேற்பார்வை செய்யும் சட்ட திட்டங்களுடன் பாடசாலை மட்ட முகாமைத்துவ நடைமுறைகளின் படி பாசாலைகளில் மேற்கொள்ளப்படும் சில முன்வைப்புக்களிடையே முரன்பாடுகள் அதிகளவில் காணப்படுகின்றன.

5) முகாமைத்ததுவ செயன் முறைகளின் கட்டமைப்பு.

வழக்கத்தை மாற்றியமைத்தல் புதுமை புகுத்தல் அணுகுமுறைகள் முகாமைத்துவ செயற்பாடுகளின் அமுலாக்கத்தில் கணிசமான முரண் நிலைகளையும் குழப்ப நிலைகளையும் தோற்றுவித்தது. இவை திட்டமிடல், தீர்மானம் மேற்கொள்ளல் என்பவற்றின் வினைத்திறனில் பாதிப்பை ஏற்படத்தக்கூடியவையாகும்.

6) வெளியீடுகளைவிட செயன்முறை அமுலாக்கம் முக்கியம் பெறுதல்.
முறைசார் முகாமைத்துவ கட்டமைப்பை கொண்டு நடாத்துவதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதால் அச்செயன்முறையினூடாக உச்ச வெளியிட்ட ஆற்றலைப் பெறுவதற்கான வினைத்திறன் நோக்கு கைவிடப்படுகிறது.

7) பாடசாலை முகாமைச்சபை உறுப்பினரின் பலவீனங்கள்.
பாடசலை முகாமைச் சபை உறுப்பினர்களின் பாடசாலை மட்ட முகாமைத்துவ செயல்முறை பற்றிய அறிவு, வகிபாக விளக்கம், ஈடுபாடு என்பன பற்றாக்குறைவாக உள்ளமை.

8) போதிய வள வசதிகள் இன்மை.
பாடசாலை மட்ட முகாமைத்துவத்தினுடாக பாடசாலைகள் விருத்தியை நோக்கி நகர்வதற்கு தேவையான பௌதிக, நிதி, மனிதவளங்கள் கிடைப்பது அவசியமாகும் இவை கட்டுப்படுத்தப்படும் போது பாடசாலைகள் மாணவர் கல்விவெளியீடுகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்க இயலாது

9) பாடசாலை மட்ட முகாமைத்துவ செயலாற்றலை மதிப்பீடு செய்யும் பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்படாமை அதனை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்த முடியாமைக்கு காரணம்.

இவ்வாறன பல காரணங்கள் பாடசாலை மட்ட முகாமைத்துவ எதிர்பார் கைகளுக்கும் யதார்த்தநிலையில் அதன் வெளியீட்டு கொள்ளவிற்கும் இணக்க மின்மையை தோற்றுவித்துள்ளமை சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே பாடசாலை முகாமைத்துவ அணுகுமுறை பாடசாலைகளின் செயலாற்றுகையை மேம்படுத்து வதற்காக அமைவதை உறுதிசெய்வாற்கு அதனுடன் இணைந்ததான பல்வேறு நிபந்நனைகள் பூர்த்தி செய்யப்படுவது அவசியமாகின்றது.

ஊசாத்துணைகள்

1. கல்வி அமைச்சு, இலங்கை, 2005. பாடசாலை மேம்பாட்டுத் திட்டம், சுற்று நிருபம் 24/2005

2. சந்தன, ஆ. (2006). பாடசாலை மட்ட முகாமைத்துவம். கொழும்பு மாவட்ட பாடசாலைகளில் இருந்து பெறும் ஆதாங்கள், கொழும்பு பல்கலைக்கழகம்

3. கல்வி அமைச்சு இலங்கை 2011. பாடசாலை மட்ட முகாமைத்துவம், பாடசாலைத் தொகுதி வழிகாட்டி

4. வொல் செற்றர்,P (1996). பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் அதிபரின் வகிபாகம். கொலம்பியா பல்கலைக்கழகம்.

திரு.வைத்திலிங்கம் விஜயபாஸ்கர்

## மனதோடு பேசு

மனமே மனதோடு பேசு
மணம் சுமந்த மலர் பற்றி
மனம் சுமந்த இதயம் பற்றி
கலை தந்த ஞானம் பற்றி
கவிதை தந்த வரிகள் பற்றி
காற்றில் மிதந்த தென்றல் பற்றி
மனதோடு பேசு

வளம் நிறைந்த நிலம் பற்றி
வலை நிறைந்த மீன்கள் பற்றி
அலை சுமந்த கடல் பற்றி
அணை கடந்த வெள்ளம் பற்றி
கதிர் சுமந்த நெல் பற்றி
கனிவாய் மனதோடு பேசு

பண்பட்ட மனிதர் போல
பண்படுத்தப்பட்ட மண் போல
பார் தாங்கும் சுமை போல
இயற்கையின் எழில் போல
பாடலின் பண் போல்
எத்தனை எத்தனை ரகசியங்கள்
எடுப்பாரற்றுத் தவழ்கின்றன
பக்குவமாய் படித்திட
பண்பாய் மனதோடு பேசு.

தென்றல் காற்று வீசுவதைப்பற்றி
தேன் மதுர கானம் பற்றி
ரீங்காரம் செய்யும் வண்டுபற்றி
சுறுசுறுப்பான எறும்பு பற்றி
பூஞ்சோலையின் பூக்கள் பற்றி
பூமியில் இத்தனை விடயங்கள் பற்றி
இனிதாய் மனமே மனதோடு பேசு

திருமதி.தர்சினி சிவநேசன்
ஆசிரியர்

# Discipline - How can we implement

Discipline is a word often used but the least understood Discipline refers to a system where actions are controlled by certain almost fixed rules. So wherever there is systematic work, we find discipline. This way anything having a system of rules and regulations is looked upon as discipline. In this case even subjects are considered disciplines. Every branch of knowledge is supported by a system of rules. There is no question of denying them. The grammar of a language is a good enough example of discipline. The law of the land is again another discipline.

Discipline or norms have spread to humor affairs. In every walk of life there must be discipline. Thus if everyone is asked to keep to the left of the road and the people follow it, then they are disciplined. In behaviour also we speak of disciplined behaviour. People at all levels have a way of behaviour. If the outcome of such behaviour is good for all then such people are said to be disciplined. This is often used to judge school students. If they behave well in class, in public and at home then we say the students are disciplined.

There can't be a better example of a disciplined organization than our body. How the various parts and organs of our body function is something wonderful; it is a marvel of discipline. Discipline in learning may involve doing the right thing in a right way using the right tools. Learning very often involves humans and the learner must go to the right person.

May people are naturally lazy and selfish. Parents had to drag their children out of bed. School teachers begged them to try to use their brains a little more. Minority of people seem to be born with a single minded motivation which leads them to achieve, irrespective of outside pressures. Many people accept discipline exerted from outside.

The old saying 'example speaks louder than words' has much truth in it, and the exceptions prove the rule. Self disciplines involve taking decisions. Where there is innate weakness, however, the factors mentioned above will tip the scales in the wrong direction. Even when the background is unexceptionable, there is isolated cases were young people go the wrong way. This could be due to genetic weakness.

Indiscipline among students is one of the major problems faced by schools today Gangsterism in particular has become a menace due to its violent nature Gangsterism involves bullying, extortion and even physical assault. Statistics and studies on gangsterism indicate most student gangsters hail from poor background or broken families whereby they lack attention and love from family members propelling them to behave in such a manner. So discipline teachers of each and every school would first undertake to study the extent of the problem in their school as well as the reasons why students would get involved in gangsterism. Instead of caning or punishing gangsters, teachers would counsel them and use the soft handed approach. Discipline teachers would collaborate with the other teachers to expose students to fun-filled activities and outdoor learning experience to make school a more exciting place.

To conclude discipline make life cashier. It makes for achievements in all walks of life easier. The great saying. "Discipline is punctuality and punctuality is discipline". Last but not least, it makes learning efficient, effective and lasting. But the best discipline is that which is developed with in and not forced.

"Confidence comes from discipline and training - Robert Kiyosaki
"Discipline your self and others won't need to" - Jone wooden
"Discipline is the difference between what you want now and what you want most" - Unknown
"With self discipline most anything is possible" - Roosevelt
" If I want to be great I have to win the victory over myself ... self - discipline - Harry S.Rruman
"Discipline is wisdom and vice versa" - N.Scott pect.

Mathirasi Suthaharan
Teacher

# பெற்றோரும் கல்வியில் அவர்களது வகிபாகமும்

இரு குரவர் (மாதா, பிதா) என்னும் எண்ணகருவானது எமது மரபிலே பெற்றோர் வீட்டில் தமது பிள்ளைகளுக்கான ஆசிரியராக இருப்பதை விளக்குகிறது. பொறுப்புள்ள பெற்றோராக விளங்குவது இந்து, கிறிஸ்த, பௌத்த, இஸ்லாமிய போதனைகளிலும் உரையாடல்களிலும் உள்ளன. பிள்ளைகளின் கல்வியானது பெற்றோரின் கடமைகளில் ஒன்றென எடுத்துக் காட்டியுள்ளன.

பல ஆராய்ச்சிக் கற்கைகள் பிள்ளைகள் தமது கல்வியை குடும்பத்தில் ஆரம்பிப்பதுடன் பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் ஈடுபாடானது அவர்களது வினையாற்றல் மற்றும் அடைவுகளை மேம்படுத்துகின்றன. பெற்றோரின் ஈடுபாடானது அதனை நன்கு திட்டமிட்டதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் உதவுவதாகும் மற்றும் நீடித்து நிலவுவதாகவும் இருக்கும்போது மிகவும் விளைதிறனுள்ளதாக இருக்கும். பெற்றோர் ஈடுபாட்டின் நன்மைகள் பொதுக்கல்வியின் ஒரு கட்டத்திற்கு வரையறுக்கப்படவில்லை. இது ஆரம்பநிலையிலிருந்து இடைநிலை வரை தொடர்கிறது. பெற்றோரின் பலத்தினை வினைதிறனுடனும் கூடியவகையில் உருவாக்கம் செய்யும் பொருட்டு அவர்கள் தமது பிள்ளைகளுக்கு வீட்டில் உதவுவதுடன் மட்டுமன்றி பாடசாலைச் செயற்பாடுகளிலம் காட்டும் ஈடுபாட்டினை அதிகரிக்க வேண்டும்.

குறைந்த வருமானமும் பின்தங்கிய குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகள் பாடசாலைகள் பெற்றோரை ஈடுபடுத்தும் போது நன்மையடைகின்றனர். ஒருவர் வீட்டினையும் பாடசாலையும் வெவ்வேறாக பிரித்துப்பார்க்க முடியாது. குடும்பங்களும் பாடசாலைகளும் பிள்ளைகள் சமூகத்துடன் சீராக்கம் பெற உதவும் வகையில் இணைந்து கொள்ள வேண்டும்.

கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது மட்டும் கற்றலுக்கு உதவுதல் கற்றலின் வெற்றிக்குப் போதாது. பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் ஈடுபாடானது பாடசாலையில் பிள்ளைகளின் வினையாற்றலையும் அடைவையும் மேம்படுத்துவதற்கு முக்கியமானதென காணப்பட்டுள்ளது. இவ்வகையான ஈடுபாடு விரும்பிய கற்றல் விளைவுகளை பிறப்பிப்பதில் பெற்றோரது கல்வி மற்றும் குடும்ப வருமானம் என்பவற்றுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் வினைதிறனுள்ள தென ஆய்வுகள் காண்கின்றன. இவை யாவும் தமது பிள்ளைகள் வழமையாக அடைந்துள்ள கல்வி மட்டங்களை சரிபார்க்கும் போது இடம்பெறுகிறது.

பாடசாலைக்காலம் முழுவதும் இடம்பெறும் கற்பவரது தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுவதுடன் தமது பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள இலவசக் கல்வியின் நன்மைகளை அறுவடை செய்வதில் தமது பங்களிப்பின் பெறுமானத்தை மதிக்கவும் இடமளிக்கிறது.

## பெற்றோருக்குள்ள உரிமைகள்

- தமது பிள்ளைகளுக்கான உடல் மற்றும் உள அபிவிருத்திக்குச் சாதகமான எவ்வகையான வேறுபாடுகளுமின்றிய கல்வி மற்றும் சமூக, ஒழுக்க மற்றும் ஆன்மீக மேம்பாடு மற்றும் இலவசக் கல்வியின் நன்மைகளை உறுதி செய்தல்.
- தமது பிள்ளைகளுக்குப் பொருத்தமான கல்வியைத் தீர்மானிப்பதில் பாடசாலை மேற்கொண்ட தீர்மானங்கள் பற்றிய தமது கருத்துக்களைத் தெரிவித்தல்.
- தமது பிள்ளை தொடர்பான எந்த ஒரு பிரச்சனை தொடர்பாகவும் அதிபர் அல்லது ஆசிரியரைச் சந்தித்தலும் அவர்களுடன் கலந்துரையாடலும்
- பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்புரிமை பெறுதலும் பதவி வகித்தலும்
- பாடசாலை அபிவிருத்திச் சங்க மட்டத்தில் பாடசாலை வளங்களின் போதாத தன்மை காணப்பட்டால் தொடர்புடைய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருதல்.
- வசதிகள் மற்றும் சேவைக்கட்டணங்கள் அல்லது பிள்ளைகளிடமிருந்து சேகரிக்கப்படும் நிதி தொடர்பான கணக்குகளைப் பரிசீலித்தல்.
- பிள்ளையின் வேலைகள் தொடர்பான முன்னேற்றம், பற்றிய அறிக்கையை ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பெற்றுக் கொள்ளுதல்.
- மாணவர்களின் வெவ்வேறு தரங்களில் வெளிப்படுத்திய அடைவுகளை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் பெற்றோர் தினத்தில் ஆய்வு செய்தல்.
- பிள்ளைகளிடம் காணப்படும் ஏதாவது உடல் அல்லது உள குறை பாடுகளை அறிவித்தலும் அங்கவீனர்களையும் பின்தங்கியோரையும் பாடசாலையில் அல்லது விசேட நிறுவனங்களில் அனுமதித்தல்.
- அரசாங்கக் கல்விக் கொள்கையை விளங்கிக் கொண்டு கல்வித்திட்டமிடல் செயன்முறையில் பங்கேற்றலும் ஒத்துழைப்பு வழங்குதலும் மற்றும் சீர்திருத்தங்கள் புத்தாக்கம் மற்றும் ஆலோசனையை உருவாகுதலும்.

## ஒவ்வொரு பெற்றோரதும் கடமைகள்

- தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பான தத்துவங்களையும் கொள்கைகளையும் விளங்கிக் கொள்ளல்.
- தமது பிள்ளைகளின் அறிவாற்றல் மற்றும் ஒழுக்கம் சார்ந்த அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- பிள்ளைகளின் வேலைகளைப் பரிசீலித்தல் மூலம் பிள்ளையின் கல்வி சார்ந்த அடைவுகள் பற்றி ஒழுங்கான விசாரணை செய்தல்.

- ❖ பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் உறுப்புரிமை பெறுதலும் அதன் வேலைகளில் ஊக்கத்துடன் பங்கேற்றலும்
- ❖ பாடசாலையின் தேவைகளை பூர்த்தி செய்வதில் பண ரீதியான பங்களிப்பு மாத்திரமன்றி உழைப்பு மற்றும் ஒத்துழைப்பு ஊடாகவும் பங்கேற்றல்.
- ❖ பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புதலும் பாடசாலையில் இருந்து வரும் தொடர்பால் எதற்கும் உடனடியாகத் துலங்குதல்
- ❖ கல்விக்காலம் முழுவதிலும் பிள்ளையின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், இதனுள் தேவையானவிடத்து சிகிச்சை சார்ந்த பரிகாரங்கள் அல்லது விசேட குறைபாடுள்ளோர் பற்றிய தகவல்களை தேவைப்படுமிடத்து அவற்றை வழங்குவதலும்.
- ❖ ஒருவருடைய சொந்த அனுபவங்களையும் நிபுணத்துவத்தையும் பாடசாலைக்குக் கிடைக்கச் செய்தல்.
- ❖ பாடசாலையின் வளங்களை பாதுகாப்பதை உறுதி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை அதிபருடன் சேர்ந்து உருவாக்குதல்.
- ❖ தாயும் தந்தையும் பிள்ளைக்கு அதிமுக்கியமானவர்கள் என்ற உணர்வையும் மதிப்பதுடன் சுதந்திரமான மற்றும் சமத்துவமான சமுதாயத்தின் நன்மைகளை முழுமையாக அனுபவிக்கும் வகையில் வழிகாட்டுதல்.

பாடசாலையிலுள்ள முக்கியமான கோரிக்கை கல்விச்சமத்துவமாகும். அத்துடன் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தராதரமான கல்வியைப் பாடசாலகைள் வழங்குகின்றதை உறுதி செய்தலை வேண்டுகின்றனர். இருப்பினும் பாடசாலைகளுடன் பெற்றோரின் ஈடுபாடு பெறுமதி வாய்ந்தது. ஆனாலும் அண்மைக்காலங்களில் பெருமளவில் பயன்படுத்தப்படாத வளங்கள் முக்கிய பிரச்சனையாக மாறியுள்ளன.

பெற்றோர் ஈடுபாடு பல வடிவங்களில் உள்ளடக்கப்படுகின்றது. இது தமது பிள்ளைகளுக்கான அடிப்படைத் தேவைகளை வழங்குதல், வீட்டில் போதித்தல், பாடசாலைச் செயற்பாடுகளுக்கு உதவுதல் தொடக்கம் பாடசாலைகளின் பேச்சாளராக சேவையாற்றுதல் வரையில் பெற்றோரின் ஈடுபாடு எவ்வளவு தூரம் நேரகாலத்துடன் ஆரம்பிக்கிறதோ அந்தளவுக்கு வினைத்திறன் கொண்ட விளைவுகளைத் தருமென ஆய்வுச்சான்றுகள் எடுத்துக் காட்டுவதுடன் எமது அனுபவ உண்மையும் ஆகும்.

திருமதி நந்தினி இடபாருடன்
ஆசிரியர்.

## அன்பே கிறிஸ்தவ வாழ்வு

அன்பின் சிறப்பை எல்லா மதங்களுமே எடுத்துக் கூறுகின்றன. "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" எனும் இயேசுவின் போதனையும், நபிகள் நாயகம் கூறும் சகோதரத்துவ தத்துவமும் அன்பைப்பற்றிப் பறைசாற்றுகின்றன. திருவள்ளுவர் திருவாக்கிலும் "அன்பிலார் எல்லாம் தமக்குரியவர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற அன்பின் பெருமையே பேசப்படுகின்றது.

நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் வழியாக கடவுள் அன்பு நம் உள்ளங்களில் அருளப்பட்டது. ஏனெனில் நாம் பாவத்தால் வலுவற்றிருந்தபோது குறித்த காலத்தில் கிறிஸ்து பாவிகள் மீட்படையும் பொருட்டு அவர் சிலுவை மரணத்தையும் ஏற்றார். அவர் நமக்காக தம் உயிரையே கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று நாம் அறிந்தோம். நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்வோமாக ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செய்கிறவன் எவனும் கடவுளிடமிருந்து பிறந்துள்ளான். அவனே கடவுளை அறிவான். அன்பு செய்யாதவனோ கடவுளை அறிவதில்லை. ஏனென்றால் அன்பே கடவுள், அவர் தம் ஒரே பேறான மகனின் வழியாக நாம் வாழ்வு பெறும் பொருட்டு அவரை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது.

இறையன்பு என்பது இறைவன் நம்மீது செலுத்துகின்ற அன்பு. நாம் இறைவனுக்கு செலுத்தும் அன்பு. ஒரு நாயணயத்தின் இருபக்கங்களைபோல் இறையன்பும் பிறரன்பும் ஒன்றிணைந்திருத்தல் வேண்டும். பிறரன்பு இல்லாத இறையன்பு செல்லாக்காசைப் போன்றது. கண்ணால் காணக்கூடிய சகோதரனை அன்பு செய்பவனே காண முடியாத கடவுளை அன்பு செய்ய முடியும்.

கிறிஸ்து தம் பணிக்காலத்தில் ஒடுக்கப்பட்டவர்கள். பாவிகள், நோயாளர்கள், பேய் பிடித்தவர்கள் மத்தியிலே பணி செய்தார். அவருடைய சொல், செயல், வாழ்வு அனைத்தும் அன்பையே மையமாகக் கொண்டிருந்தது. அன்னை திரேசாவின் வாழ்க்கையை நாம் பார்க்கும் போது அன்பிற்கு பிரதி உபகாரம் கிடைக்குமிடத்தில் பணி செய்வதை விட அன்புக்காக ஏங்குபவர்கள் மத்தியிலேயே பணி செய்வது சிறந்தது என்று தன்னை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்தார்.

"பகைவனுக்கு அன்பு செய்" என்று கூறிய இயேசு எங்களைத் துன்புறுத்துவோர், எள்ளி நகையாடுவோர், வெறுத்து ஒதுக்குவோர், புறம் பேசுவோர் அனைவரையும் மன்னித்து எம் சகோதரர்களாக ஏற்று" அன்பு செய்ய முன்வர வேண்டுமென்கிறார். அன்பு இல்லையேல் அகிலத்தில் ஒன்றும் இல்லை. அன்பற்ற வாழ்க்கை சாரமற்றது. பொருளற்றது, ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும்

போலானது. அன்பின் விரிவாக்கம் வாழ்வு. அன்பு தெய்வீகமானது. அன்பினை வளர்த்துக் கொள்ளும் அவரிடமும் இறைவன் தன்னை வெளிப்படுத்துவார். அன்பு மட்டுமே நிலையான பேரின்பத்தை வழங்குகின்றது. அன்பினை எல்லோருக்கும் பகிர்ந்து வாழும்போது நம் இதயம் மகிழ்ச்சியால் நிலைத்திருக்கும். அன்பு எக்காலத்திலும் நிலைத்து இருக்கும்.

அன்பு பொறுமையுள்ளது. தன்னலமற்றது. நன்மை செய்யும். இறுமாப்பு அடையாது. தீங்கு நினைக்காது தீவினையில் மகிழ்வுறாது. மாறாக உண்மையைக் கண்டு உள்ளம் மகிழும் எனும் கருத்துக்கள் நிறைந்த வாழ்வே கிறிஸ்தவ வாழ்வாகும்.

அ.மதுமிதா
தரம் - 11

## இன்றைய வகுப்பறைக் கற்பித்தலில் இலத்திரனியல் சாதனங்களின் செல்வாக்கு:

மாணவரின் வகுப்பறைக் கற்றல் வினைத்திறன் மிக்கதாக இருக்க வேண்டுமாயின் வகுப்பறையில் மாணவர் ஆசிரியர் இடைவினை சிறந்த நிலையில் இருக்கவேண்டும். ஆசிரியர் வினைத்திறன் மிக்கவராக இருக்கும்போது ஆசிரியர் மாணவர் இடைவினை சிறந்ததாக இருக்கும். ஆசிரியரின் கற்பித்தல் இயங்குநிலையில் இருக்கும் போது சிறந்த கற்றல் சூழல் காணப்படும். ஆசிரியர் சிறந்த் கற்பித்தல் முறைகளினைக் கையாள வேண்டும்.

ஆசிரியர் சிறந்த நவீன கற்பித்தல் முறைகளினைப் பின்பற்றினால் மாணவர்களின் கற்றல் ஈடுபாடு சிறந்து விளங்கும். நவீன கற்பித்தல் முறைகளினால் மாணவர் அதிகம் ஈர்க்கப்படுவர். இடைநிலை வகுப்புக்களில் கற்பித்தலை கவர்ச்சிகரமாக்குவதற்கு கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு அவசியமாகின்றது. கட்புல சாதனங்களை ஆசிரியர் பயன்படுத்துவது வேண்டப்படுகின்றது. கட்புல சாதனங்களை ஆசிரியர் பயன்படுத்துவது வேண்டப்படுகின்றது. கட்புல சாதனங்களில் மிகவும் நவீனமானதும் முன்னேற்றகரமானதும் இலத்திரனியல் துணைச் சாதனங்களாகும். இலத்திரனியல் துணைச்சாதனங்களை வகுப்பறைக் கற்பித்தலில் பயன்படுத்துவதனால் கற்றவை விளைதிறன் மிக்கதாக்க முடியும்.

நவீன கற்பித்தலில் இடைநிலை ஆசிரியர் இறுவெட்டு, கணனி, பல்லூடக எறியி, தொடுதிரை, ஸ்மாட் தொலைக்காட்சி, இணையம், முன்வைப்பு மென்பொருள்கள் என்பவற்றினை பயன்படுத்தும்போது வகுப்பறையில் மாணவர் ஈடுபாட்டை அதிகரித்துக் கொள்ள முடியும். சிறந்த வகுப்பறை கற்பித்தலில் இரத்திரனியல் துணைச்சாதனங்கள் இன்றியமையாதனவாகின்றன. இலத்திரனியல் சாதனங்களினை ஆசிரியர் பயன்படுத்தும்போது கற்றல் ஊக்குவிக்கப்படுகிறது.

இலங்கைப்பாடசாலை முறைமையில் கணினிக்கல்வி 1983ஆம் ஆண்டிலேயே தொடங்கி விட்டது. ஆயினும் கல்வியமைச்சின் நோக்கில் இலங்கை போன்றதொரு வளர்ச்சியடையும் நாட்டில் ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. (சந்திரசேகரன் & சின்னத்தம்பி, 2002,ப.14) 1983இன் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கணினி வளநிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதில் இன்று 73 கணினி வளநிலையங்கள் இயங்கி வருகின்றன. கற்றல்-கற்பித்தலில் ஆரம்பம் முதல் உயர்தரம் வரை பாடத்தைக் கற்பிக்கும் கருவியாக கணினியைப் பயன்படுத்தும் போது கற்றல் சார் திறன்களை மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் தான் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்களை கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் இணைக்கும் போது பல்வேறுபட்ட

பாடங்களைக் கற்பிக்கவும், கற்றல் மற்றும் பாடத்துறைகளில் தகவல் முகாமைத்துவக் கருவியாகவும் பயன்படுத்த முடியும், என்ற நோக்கில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைக் கற்பிப்பதற்கு அரசு எதிர்பார்த்தது. இதன் பிரகாரம் பாடசாலைக் கல்வியில் தகவல் தொழில்நுட்பம் குறித்த அரசின் தேசியகொள்கை 2001ஆம் ஆண்டு கல்வியமைச்சின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடாக மேலெழும்ப வேண்டும். கற்றலின் தரத்தையும், மாணவர்களின் கற்றலையும், விசாலப்படுத்துவதற்கும், பாடசாலையில் தகவல் தொழிநுட்பம் தொடர்பான திட்டமிடல் அமுலாக்க வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம் எனக் கருதப்பட்டு 2003ஆம் ஆண்டில் தேசியகல்வி ஆணைக்குழுவால் இலங்கையின் பொதுக்கல்வியில் தேசிய கொள்கைக்கான சட்டம் வெளியிடப்பட்டது.

இலத்திரனியல் சாதனங்கள் இன்று பாடசாலைக் கற்றல் - கற்பித்தல் முறைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. கரும்பலகை, வெண்கட்டி, ஆசிரியர்களின் விரிவுரை என்பவை வகுப்பறைச் செயற்பாடுகளிலிருந்து படிப் படியாக விடை பெற்றுவருகின்றன. மாணவர்கள் தமது கற்றலுக்கு தாமே பொறுப்பு வகித்து தம்மைத்தாம் இயக்குதலும், செயற்பாடுகளில் ஈடுபடுதலுமே, இன்றைய பாடசாலைகளில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. (சந்திரசேகரன், 2008,ப,77)

மேலும் இலத்திரனியல் சாதனங்களை ஆசிரியர் வகுப்பறைக் கற்பித்தலில் பயன்படுத்தி கற்றலில் விளைதிறனை மேம்படுத்தலாம். கற்பித்தலில் உண்மையான வகுப்பறை நிலைமையில் அல்லது பாவனை செய்யப்பட்ட சூழலில் ஒரு நிகழ்வை வீடியோ படமாக்கி அவற்றின் உதவியுடன் ஆசிரியர் பாடத்தினை முன்வைக்கும் போது அது உயிரோட்டமான கற்பித்தலாக மாற்றமடையும். அத்துடன் சுதந்திரமாகக் கற்றல், கூட்டுக்கற்றல், கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்தல் என்பன கற்றலுக்கான ஊக்கலை வழங்கும் காரணிகளாக அமைவதால் அதனை ஆசிரியர்கள் வகுப்பறைக்கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தல் வேண்டும். (கருணாநிதி.2009)

மேலும், இன்றைய கணினிப் பாவனை அதிகரித்து வரும் கால நீரோட்டத்தில் பல்லூடாக எறிகருவிப்பாவனை அதிகரித்த இவ்வேளையில் ஆசிரியர்கள் அக் கருவிகளை பயன்படுத்தி கற்பிக்கும் தேர்ச்சிகளை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. (சிவகுமார், 2009,ப.15)

இன்று மொழில்நுட்பத்தின் பரவலாக்கம் ஆசிரியர்களின் கல்வியில் பல மாற்றங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது. கற்பித்தலில் தொழில்நுட்பக்கருவிகளை இணைத்தலின் மூலம் கல்விச் செயற்பாடானது மாணவர்களின் கற்றல் முறைகளை மேம்பாடைய செய்வதுடன் கற்பித்தலில் விளைதிறனையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கபபடுகின்றது. இன்று கற்பித்தலியலில் தொழில்நுட்பத்தின் பொருத்தப்பாடான இணைவு கற்றலில் அதிக விளைவினைத் தருவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. (பரமானந்தம், 2010)

பொதுவாக, எந்தப்பாடத்தைக் கற்பித்தாயினும் கற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகும். இன்றைய நவீன உலகில் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட அம்சமாக இவை காணப்படுவதனால் கரும்பலகை தொடக்கம் கணினி, பல்லூடகக்கருவி என கற்பித்தல் சாதனங்கள் நீண்டு செல்வதனைக் காணலாம். நவீன கற்பித்தல் சாதனங்களில் கணினி மிக முக்கிய பங்கினை வகிப்பதனால் ஆரம்பநிலை மாணவர்கள் முதல் உயர்நிலை மாணவர்கள் முதல் உயர்நிலை மாணவர்கள் தொழில்நுட்பம் என்பது கல்வியினதும் பொருளாதாரத்தினதும் அடிப்படைத்திறவு கோலாகும். தோட்டன் (1986) என்பவரின் கருத்துப்படி தொழில்நுட்பம் என்பது "உபகரணங்களுக்கும், மனிதருக்குமிடையிலான செயற்பாடு ரீதியான இலக்கை அடைவதற்கான விஞ்ஞான ரீதியான அறிவுடன் ஏனைய திறன் சார் அறிவையும் பயன்படுத்தி இலக்கையடையும் ஓர் சமூகச் செயற்பாடு" ஆகும் பேராசிரியர் கணபதி (2005) பொருத்தமான விஞ்ஞான அறிவியல் தொழில் நுட்ப முறைகளையும், கற்பித்தல் சாதனங்களுடாக எழுந்துள்ள கல்விப் பிரயோகங்களைப் பரந்த அளவில் எடுத்துச் செல்லும் துறையாக கல்வித்தொழில்நுட்பம் விரிவடைந்து வருவதனால் கல்வியின் நோக்கங்களை தெளிவுபடுத்த உதவும் கருத்தியல்கள், செயன்முறைகள், தேர்ச்சிகள், துணைச்சாதனங்கள் என்பவையும் கல்வித்தொழில்நுட்பத்தின் கூறுகளாக இருப்பதனால் இவற்றினூடாக எழும் கல்விப்பிரயோகங்களை தொடர்புபடுத்தி பிரயோகிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்துகிறது. (பரமானந்தம், 2011,ப,09) கலாநிதி பக்கீர் ஜ.்.பர் "மனிதனுக்கு மொத்தமாக ஐந்து புலன்கள் உள்ளன. புலக்காட்சி பெறுவதற்கான புலனுணர்வுகளை இவற்றினூடாக மாணவன் பெறவேண்டும். இதற்கு ஆசிரியர் மாணவர்களின் புலனனுபவங்களை பயன்படுத்தக்கூடியவாறு கற்றல் அனுபவங்களைத் திட்டமிடல் வேண்டும்." எனவே செயலை அடிப்படையாகக் கொண்ட கற்றல் மூலம் மாணவர் நடத்தையில் மாற்றத்தினை உண்டாக்கலாம். கற்போனின் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகள் மூலம் பெறப்படும் கல்வியானது வினைத்திறன் மிக்கதாக அமைகின்றது. இதனால் தான் தறபோது ஏயுமு முறை எனப்படும் கற்றல் செயற்பாடு பிரபல்யமாகி வருவதை காணலாம். (V-Visual, A-Auditory, K-Knesthetic) எனவே கேட்டு, பார்த்து செய்து பார்த்தல் மூலம் கற்றல் செயற்பாட்டை திட்டமிட இன்று இலத்திரனியல் சாதனங்கள் கல்வித்துறையில் பெரிதும் பயன்படுகின்றன. (பரமானந்தம்,2011,ப.23)

இலத்திரனியல் சாதனங்களினூடாக மாணவர்களுக்கு செய்முறைசார் அனுபவக் கல்வியினை வழங்க முடியும் எனவும் குறிப்பிடுகின்றனர். அந்தவகையில் செயல் முறைக்கல்வியின அவசியம் பற்றியும் பல்வேறு கல்வியியலாளர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

- ஜீன் பியாஜே, "பிள்ளைகள் பல்வேறு செயல்களிலும் உபகரணங்களை பயன்படுத்துவதிலும் ஈடுபட ஆசிரியர்கள் உதவியளிக்க வேண்டும். மாணவர்களுக்கு பல்வேறு செயல் அனுபவங்களை வழங்கி செயல் முறைக் கல்வியை வழங்கும் போது அவர்கள் கூடுதலான விளக்கத்தைப் பெறுகின்றனர். (முத்து லிங்கம்,ச,ப.34)
- ஜோன் டூயி, "மனிதனின் செயல்கள் நாள் தோறும் நிகழும் வளர்ச்சிக்கேற்ப மாற்றமடைதல் வேண்டும்" எனவே செயற்பாட்டையும் அனுபவத்தையும், அறிவையும் பிரித்தல் முடியாது. (சந்திரசேகரம், 2011,ப.61)
- மரியாமொண்டிசோரி "குழந்தைக்கு கற்கும் கருவிகளே அறிவைத் தூண்டும், குழந்தைப்பருவ கல்வியானது செயல்முறைக்கல்வியாக இருத்தல் வேண்டும். நேர் அனுபவங்கள், செய்துகற்றல் என்பவற்றுக்கு முறையான கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் குழந்தைகள் தாமாகவே சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் கற்க முடிகின்றது. (கிருபா, 2012,ப,06)
- புரோபல் - குழந்தைகளிடம் இருக்கின்ற ஆர்வங்கள், ஊக்கங்கள், திறன்களை வெளிக்கொணர்வதற்கு சுயசெயற்பாடுகளுடன் கூடியதான கற்றல்- கற்பித்தல் சாதனங்களே முதன்மையாக அமைவதனால் அதனை பயன்படுத்தி கற்பிப்பதன் மூலம் குழந்தைகளிடத்தில் உண்மையான இயல்புகளையும், ஆர்வத்தினையும், மனவலிமையையும் வளர்த்துக் கொள்ளலாம். (மன்சூர் எம்.கே.எம்,ப.38)

புதிய நூற்றாண்டில் நிகழ்ந்து வரும் துரித மாற்றங்களுக்கு புதிய அறிவும், தொழில்நுட்ப விருத்தியும் அடிப்படையாக உள்ளன. இவற்றை உள்வாங்கிக்கொண்டு நடைமுறைப்படுத்தும் ஆற்றல் ஒரு சில உயர்தொழில்களுக்கு மட்டுமே உண்டு. ஆசிரியர் தொழிலும் புதுமையும், ஆக்கத்திறனும் கொண்ட பிரசைகளை உருவாக்குவதில் முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக இருப்பதனால் அத்தொழில் ஓர் உணர் தொழிலுக்குரிய பண்புகளுடன் கூடியதான மாற்றத்தை பெறும் நோக்குடன் புதிய பல வகிப்பாகங்களையும், பொறுப்புக்களையும் ஏற்று வினைத்திறனுடன் கூடிய தொழிற்றகைமைப்படுததல் அவசியம் (கருணாநிதி, 2009)

மாறிவரும் உலக நியதிகளுக்கேற்ப ஒவ்வொருவரும் தம்மை இற்றைப்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகும். அதற்கமைவாக தொழில்நுட்ப உலகில் ஆசிரியர்கள் கற்பித்தல் வகிபாகத்தில் நிலைமாறும் வகிபாகத்தில் காணப்படுவதால் ஆசிரியர் ஒரு வளவானவராக செயற்படுவதற்கு கணினி அறிவு இன்றியமையாததாகும். ஆகவே ஆசிரியர்கள் அனைவரும் குறைந்த பட்சம் கணினி மென்பொருளை (M.S.Office) பயன்படுத்தும் அறிவையாவது பெற்றிருப்பது அவசியமாகின்றது. அத்துடன் 2010ம் ஆண்டில் இருந்து தரம்

01இல் இருந்து கணினி அறிவு கட்டாயமாக்கப்படுவதனால் அனைத்து ஆசிரியர்களும் கணினி அறிவைப்பெற்று வகுப்பறையை சிறப்பான முறையில் முகாமை செய்ய முடியும். (பரமானந்தம், 2009,ப.16)

ஒரு ஆசிரியர் எளிமையானவை தொடக்கம் சிக்கலானவை வரையில் 60ற்கும் மேற்பட்ட வகிபங்குகளை ஏற்க வேண்டியுள்ள போதிலும் அவற்றுள் முக்கியமான வகிபங்கு கற்பித்தலேயாகும். சமகால செல்நெறிகளின் படி கற்பித்தற்பணி விரிவாக்கமடைந்துள்ளது.

அறிவுத்துறையில் ஏற்பட்ட இவ்விரிவாக்கங்களுக்கு ஏற்ப ஓர் ஆசிரியர் சகல விடயங்களையும் கற்று கற்பித்தலை இலகுவாக்குதல் வேண்டும். இப்பணியை நிறைவேற்ற ஆசிரியர் தொடர்ந்தும் கற்று அறிவை இற்றைப்படுத்துபவராக இருத்தல் வேண்டும். அப்போதுதான் கற்பித்தல் விளைதிறன் கொண்டதாக அமையும். (கருணாநிதி, 2009)

இன்றைய நவீன தொடர்பு சாதனங்களின் பரவலாக்கம் காரணமாக பாரம்பரிய கற்றல் கற்பித்தல் முறைகளில் மாற்றங்களை விரைவுபடுத்த வேண்டிய நிலையில் எமது ஆசிரியர் கல்விச்சமூகம் உள்ளது. கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளின் போக்கு இன்றைய உலகினூடு ஒன்றிப்போக வேண்டிய தேவையின் நிமித்தம் ஆசிரியர்களின் வகிபாகமும் மாற்றமடைந்து வருவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. தொழில்நுட்பத்தின் பரவலாக்கத்தினால் ஆசிரியர் கல்வி பாரிய மாற்றங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது. மாணவர்கள் தாமாகக்கற்று சுயமாக அனுபவங்களைப் பெறுவதற்கு ஆசிரியர் உதவி செய்ய வேண்டும். இதற்கு ஆசிரியரின் வாண்மை முக்கிய பங்கு வகிப்பதால் ஆசிரியர்கள் பாடப்புத்தகத்திற்கு வெளியே கற்றலை விரிவாக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. (சந்திரசேகரம், 2010)

கல்வி என்பது வெறுமனே அறிவை மட்டும் புகுத்தும் ஒரு செயற்பாடல்ல என்பது இன்று எல்லோராலும் ஏற்று கொள்ளப்பட்ட விடயமாகும். இன்று கற்பித்தலில் முக்கியப்படுத்தப்படும் மாணவர் மையக் கல்வியில் கல்வியின் தேசிய நோக்கங்களை வகுப்பறை நோக்கங்களாக மாற்றும் செயற்பாடுகளில் நவீன ஆசிரியருடன் தகவல் தொழில்நுட்பம் பெரிதும் முக்கியம் பெறுவதால் ஆசிரியர் தன்னை வளப்படுத்திக் கொள்ள கல்வித் தொழில் நுட்ப சாதனங்களை பயன்படுத்தல் அவசியமாகின்றது.

திரு.கெ.சுரேஸ்
பிரதி அதிபர்.

## போதனையும் சாதனையும்

நல்ல எண்ணங்கள், அவற்றின் வெளிப்பாடாக வருகின்ற நல்ல வார்த்தைகள் மற்றையோரை வாழ்விக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எனவேதான் எப்பொழுதும் மங்கள கரமான வார்த்தைகளையே வீட்டிலும் வெளியிடங்களிலும் பயன்படுத்த வேண்டும் எனப் பெரியோர்கள் கூறியுள்ளனர்.

ஒரு குழந்தை எப்படிக் பேசக்கற்றுக்கொள்கிறது. மொழியறிவு, மொழியாற்றல் என்பவற்றை எப்படிப் பொற்றுக் கொள்கிறது. இவற்றுக்கு விடை காணப்படும் போது பல விடயங்கள் புலனாகும். குழந்தை அதனது சமூகச் சூழலிலிருந்துதான் சொற்களைச் சேகரித்து, அவற்றைப் பயன்படுத்திப் பேசுகின்றது. அதாவது எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றது. தாய், தந்தை, சகோதரர், உறவினர், சுற்றத்தவர் என்பவர்களே சமூகச் சூழலில் இடம் பெறுகின்றனர். குழந்தைகள் உள்ள வீடுகளில் அக் குழந்தையோடு ஊடாடுபவர்கள், நல்லவார்த்தைகளை மங்களகரமான சொற்களை, பண்பான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். குழந்தைகளுக்கு நல்ல சூழல் அமைய வேண்டும் என்று சொல்வது இதற்காகத்தான். அத்தகைய நல்ல குடும்பச் சூழலில் வளர்ந்து வருகின்ற குழந்தைகள் பண்பாகவும் அன்பாகவுமே பேசுவர். பேச்சில் மங்களகரமான வார்த்தைகளையே உபயோகிப்பர் என்பது உறுதி. சாத்வீக குணமும், கோபமும் கொள்ளாமையும் அவர்களிடம் காணப்படும் நல்ல இயல்புகளாகும்.

குழந்தை பிள்ளைப்பருவத்தை எய்திப் பாடசாலைக்கு செல்கின்றது. பாடசாலை பிள்ளைக்கு ஒரு புதிய சூழல், ஆசிரியர்கள், தம்மை ஒத்த மாணவர்கள் உயர் வகுப்பு மாணவர்கள் ஆகியோர் அங்கு உள்ளனர். அறிவு வளர்ச்சி பெறுவதற்குத்தான் பிள்ளை பாடசாலை செல்கிறது. என்று பலர் கருதுகிறார்கள். வெறுமனே அறிவு பெற்று விட்டால் மாத்திரம் கல்வி கற்று விட்டதாக எண்ணிவிடக் கூடாது, அறிவோடு பண்புகளும், நல்லொழுக்கமும் வளர வேண்டும். மனப்பண்பு பேச்சுப்பண்பு, நடைமுறைச் செயற்பண்பு ஆகிய மனிதப் பண்புகளைப் பிள்ளைகளில் வளர்ப்பதற்கு பாடசாலை ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு அறிவு வளர்ச்சியும், பண்பு வளர்ச்சியும் ஒருங்கே நிகழும் போதுதான், கல்வி அர்த்தமுள்ளதாக அமைகின்றது. மனிதப் பண்புகள் எவை என்பதைப் பிள்ளைகள் அறிந்து கொள்ள வேண்டும். காலைப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும் போது அவற்றைப் பற்றிய கருத்துக்கள்ள வழங்கலாம் வகுப்புக்களில் பாடங்களைக் கற்பிக்கும் வேளையில் இடையிடையே சந்தர்ப்பங்கள் வரும் போது படிப்பினைகளையும் செய்யத் தகுந்தன. செய்யத் தகாதன பற்றியும் எடுத்துக்கூறலாம். விளையாட்டு மைதானம், இலக்கிய மன்றம், சுற்றுலா போன்ற சந்தர்ப்பங்களை எல்லாம் பயன்படுத்தலாம். இயற்கை எவ்வளவோ பாடங்களைக் கற்றுத்தருகின்றது. அவற்றை எடுத்துக் கூறலாம். இந்த வகையில் பிள்ளைகளின்

பண்பு பற்றிய அறிவு வளர்ச்சிக்கு வழிவகுக்கலாம். ஆனால் அத்தோடு நிறுத்தி விட்டால் பெற்ற அறிவு பயனுள்ளதாக அமைந்து விடாது. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது. அறிவுக்கும் பயன், கற்றவற்றை வாழக்கையில் கடைப்பிடித்து ஒழுகுதல்.

பிள்ளையின் அறிவு வளர்ச்சியைப் பரீட்சை மூலம் அளந்து அறிந்து கொள்ள முடியும். பிள்ளையின் பண்பு வளர்ச்சியை, அதன் நடத்தையைக் கொண்டுதான் மதிப்பீடு செய்ய முடிகின்றது. எனவே போதனையாளர்கள் வாழ்க்கையில் சாதனையாளர் களாகவும் விளங்க வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் வளர்ந்தவர்கள் முன்மாதிரியாக நடந்து காட்டும் போதுதான் அவர்களைப் பார்த்துப் பிள்ளைகளும் நல்லமாதிரி ஒழுகுவர். விஞ்ஞானம் கற்றுக் கொள்வதற்கும் நூலறிவும், செய்முறையும் முக்கியம் ஆகுகின்றன. ஆசிரியர்களுடன் வீட்டில் பெற்றோர்களும் சொல்லுக்கும் நடத்தைக்கும் இடையே முரண்பாடு தோன்றாதவாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். அப்படி அவர்களும் நடந்தும் காட்ட வேண்டும்.

ஒருவன் புகைத்தல் கூடாது என்று சொல்லி விட்டுத் தாம் புகைத்தல், மது அருந்துதல், ஆகாது என்று கூறிவிட்டு தாம் மது அருந்தினால் பார்த்துக் கொண்டிருக்கின்ற பிள்ளைகளிடம் முரண்பாட்டுணர்வு தோன்றுவது இயல்பு. கொலை, களவு என்பன பாவச் செயல்கள் என்று கற்பிக்கிறார் ஆசிரியர். மரத்தை வெட்டுவது, காட்டை அழிப்பது பிழையென்றும் சொல்லிக் கொடுக்கிறார். பின்னர் கற்பித்தலின் போது கள்ளக் கந்தன், வெள்ளைப் பூனையை வெட்டிக் கொன்றான் என்றும் மரத்தை வெட்டினான், காட்டை அழித்தான் என்றும் உதாரணங்கள் தரப்படுகின்றன. இதுவும் ஒரு வகை முரண்பாடுதான். பூனையை அன்போமு வளர்த்தான், மரத்தை நாட்டினான் போன்ற நல்ல மங்களகரமான ஆக்கபூர்வமான உதாரணங்களைக் கூறுவதன் மூலம் முரண்பாடுகளைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு நன்கு சிந்தித்துப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் செயற்படுவதன் மூலம் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை உணர்வோமாக.

திருமதி சியாமளா ஸ்ரீபரன்
ஆசிரியர்

## நாட்டார் இசையின் கலாச்சாரப் பின்னணி

தூய வளியும் இயற்கை வனப்பின் காட்சிகளும் பறவைகளின் இனிய ஒலியும் எவ்வாறு கிராமப் புற வாழ்வில் நுகரப்படுகின்றதோ அதேபோன்று வஞ்சகமற்ற மனித மனங்களையும் அயலவர்களின் நல்ல வாழ்வுக்காக தம்மையே அர்ப்பணிக்கின்ற கள்ளம் கபடமற்ற உறவாளர்களையும் கிராமங்களில்த் தான் காண முடியும்.

கிராமிய இசை கிராமங்களில் வசிக்கும் சாதாரண மக்கள் தங்களுக்கென்று வகுத்துக் கொண்ட ஒருவகை இசையாகும். பயிற்சி பெறாத குரல்கள் பாடுவதற்கு ஏற்ற வகையில் கிராமியப் பாடல்கள் அமைந்திருப்பதைக் காணலாம். ஆனால் எளிமையான இப்பாடல்களில் ஒரு கவர்ச்சி இருப்பதையும் நாம் உணர முடிகிறது. கிராமியப் பாடல்கள் வழியாக கிராமிய மக்களின் கற்பனைத் திறனையும், நகைச்சுவையையும் உள்ளத்து உணர்வுகளையும் நாம் அறிய முடிகின்றது.

தமிழ் கிராமியப் பாடல்கள் அதிகமாக ஆனந்த பைரவி, நாத நாம கிரியை, நீலாம்பரி, புன்னாகவாராளி, குறிஞ்சி, நவரோஜ் போன்ற இராகங்களில் இயற்றப்பட்டுள்ளதை நாம் அறிகின்றோம். எல்லா மொழிகளிலும் இப்பாடல்கள் காணப்படுகின்றன. இசை மேதைகளாகிய தியாகராஜர், கோபால கிருஷ்ண பாரதியார், இராமசாமிசிவன் முதலியோரும் கிராமிய இசைப்பாடல்களையும் இயற்றியுள்ளனர் என்பது நினைவில் கொள்ள வேண்டியது ஒன்றாகும். நாட்டார் இயலானது கிராமிய இலக்கியம், நாட்டார் இலக்கியம், நாடோடிப் பாடல்கள், பாமரர் பாடல்கள், எழுதாக் கவிதைகள், வாய்மொழி இலக்கியம், நாட்டுப் பாடல்கள், மக்கள் மரபியல், சிற்றூரியல், பாமரர் இலக்கியம், பொதுப்புராணவியல் என்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

நாட்டுப்புறவியல் என்ற சொல்லை 1846இல் வில்லியம் தோமஸ் என்பவரே முதன் முதலில் ஆங்கிலத்தில் "FOLK LORE" என்ற ஆங்கிலப் பதம் மூலம் குறிப்பிட்டார். இவரைத் தொடர்ந்து நாட்டாரியல் தொடர்பான ஆய்வாளர்கள் இதனைப் பயன்படுத்தத் தொடங்கினார். இதற்கு முன்னர் இது பொது மக்களைச் சார்ந்த மரபு முறைகள் (POPULAR ANTIQUTIES) என அழைக்கப்பட்டது.

நாட்டார் இலக்கியத்தின் பண்புகளின் அடிப்படையில் அதனை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. நாட்டார் பாடல்கள் (Folk Songs)
2. நாட்டார் கதைகள் (Folk Tales)
3. கதைப் பாடல்கள் (Ballads)
4. பழமொழிகள் (Proverbs)
5. விடுகதைகள் (Riddles)
6. நாட்டார் கலைகள் (Folk crafts)

வேலைத்தலத்தில் வேலை செய்யும் போது களைப்பையும் சலிப்பையும், உடல் சோர்வையும் போக்குவதற்காக பாடப்படும் நாட்டார் பாடல் ஒன்றில்

"ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது - இங்கே
ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது"

என்ற பாடல் அடிகள் புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் வேலையோடு ஒருங்கியைப்பதை புலப்படுத்துகின்றது.

பிரசவ சடங்கு வரிசையிலே குழந்தை பிறந்தது என்று அறியும் ஆவலில் இருந்தவர்களுக்கு மருத்துவிச்சியின் இந்தப்பாடல் ஆண் மகவு பிறந்த தென்ற மகிழ்ச்சியைக் கொடுக்கும்

'அரிசிப் பொதியோடும் வந்தீரோ - தம்பி
அரிசி மலைநாடும் கண்டீரோ - தம்பி
நெல்லுப் பொதியோடும் வந்தீரோ - தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ - தம்பி

காதற் பாடல் பாடும் போது கிராமத்திற்குக் கிராமம் வேறுபட்டுக் காணப்படும்.

ஆண் -"தண்ணிக் குடமெடுத்து
தனி வழியே போற பெண்ணே
தண்ணீர்க் குடத்தினுள்ளே
தளம்புதடி என் மனசு"

காதல் உணர்வுகளை பக்குவமான மொழிப்பாங்கில் வெளிப்படுத்துவதற்கு கிராமியப்பாடல்களுக்கு இணையில்லையெனலாம்.

பெண் -ஓடையிலே போற தண்ணி
தும்பி விழும் தூசிவிழும்
வீட்டுக்கு வாங்க மச்சான்
வெந்த தண்ணி நான் தாறன்"

கடற்றொழிலாளர்களின் அவல வாழ்வைச் சித்தரிக்கும் பழமொழி இன்றும் வடபுலத்தில் பேசப்படுகின்றது.

மரத்தில் ஏறியவனை மரத்தின் கீழ் பார்க்கலாம்
கடலில் போனவனை கரையிலும் காண முடியாது"

தென்மாங்குப் பாடலில் வண்டிக்காரனை ஒரு மாடு என்ற மறைமுகமாகச் சொல்வது போல அமைந்துள்ளது.

சின்னச் சின்ன வண்டி கட்டி
சிவத்த காளை இரண்டு பூட்டி
வன்ன வன்ன பாரமேற்றி
வாராண்டி உன் புருஷன்

மாடுமோ செத்தல் மாடு
மணலுமோ கும்பி மணல்
மாடிழுக்க மாட்டாமல்
தானிழுத்து மாயிறாண்டி உன் புருஷன்

திரை இசைப் பாடல்களிலும் நாட்டார் பாடல்களின் தாக்கம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தஞ்சாவூரு மண்ணெடுத்து
தாழியொன்று செய்யச் சொன்னேன்
தாழியிருக்கும் மட்டத்திலே நான்
தங்கியிருப்பேன் திட்டம் போல
படம் - பொற்காலம்

பாடறியேன் படிப் பறியேன்
பள்ளிக்கூடம் நானறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன்
எழுத்து வகை நானறியேன்
ஏட்டிலே எழுதவில்லை
எழுதி நான் படிக்கவில்லை
படம் - சிந்துபைரவி

இஞ்சி இடுப்பழகி
மஞ்சள் சிவப்பழகி
கள்ளச் சிரிப்பழகி
மறக்க மனம் கூடுதில்லையே
படம் - தேவர்மகன்

இவ்வாறாக நாட்டார் பாடல்களே நாட்டார் இலக்கியத்தை விதந்துரைப்பதை உணரக்கூடியதாக உள்ளதுடன் நாட்டார் இலக்கியம் அழியாது பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கட்டாய கடமையாகும்.

திருமதி. பத்மா என்சிலிருக்மன்
ஆசிரியை

# புலக்காட்சித் திறனூடான கற்றல் மூலம் முன்பள்ளி சிறார்கள் வளர்தலும் முன்பள்ளிச் சிறார்களை வளர்த்தலும்.

மனித வாழ்க்கையிலும் கல்வி நிலையிலும் மிக முக்கியமான முதன்நிலைப் பருவம் முன்பள்ளிப்பருவம் ஆகும். இலங்கையில் பொதுவாக மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரை முன்பள்ளிப் பருவமாக கொள்ளப்படுகின்றது. இப்பருவத்தில் சிறுவர்களின் உடல், உள, மனவெழுச்சி அறிவு, திறன்கள் மனப்பாங்குகள் வேகமாக வளர்கின்றன. எனவே அதனைப் புரிந்து கொண்டு பெற்றோர்களும் முன்பள்ளி ஆசிரியர்களும் அதற்கு ஏற்ப புலக்காட்சி விருத்திச் செயன்முறை அனுபவங்களை சிறுவர்களுக்கு வழங்க வேண்டும். சிந்தித்தல் என்ற உளச் செயல்முறை வழியாகவே அறிவு வளர்ச்சி தொடங்குகின்றது. சிந்தித்தலின் முதற்படி புலக்காட்சி ஆகும். புலக்காட்சி என்பது நமது புலன்களைப் பாதிக்கும் பொருட்களைப் பற்றிய சிந்தனை எனலாம். புலக்காட்சி வழியாகவேதான் வெளியுலக செயன்முறைகள் பற்றி அறிய-கற்க - ஆய்வு செய்ய கற்பனை செய்ய முடிகிறது.

புலக்காட்சியூடாக நாம் பெறும் புலனுணர்ச்சிகள் பார்வை, கேட்டல், தொடுகை, சுவைத்தல், மணத்தல் என்பவையாகும். இப்புலனுணர்ச்சிகள் ஒரு புலன் தூண்டப்படுவதன் உடனடிப்பலாபலன்களாகும். கண், காது, மூக்கு, வாய், தொடுகை போன்ற புலன்களின் வாயிலாக அறியும் தனிப்பட்ட பண்புகள் புலனுணர்ச்சிகளாகும்.

முன்பள்ளிச் சிறுவர்களுக்கு கற்றல் அனுபவங்களை வழங்கும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கல்வியியலாளர்களும் புலக்காட்சிச் செயன்முறை தொடர்பான பூரண அறிவைப் பெற்றிருக்க வேண்டும். சிறுவர்களின் மனதுள் தோன்றும் புலனுணர்ச்சிகள் புலக்காட்சியாகி விடுகின்றன. இப்புலக்காட்சியினூடாக அறிவும் சேர்ந்தே சிறுவர்களின் உள்ளத்தில் எழுகின்றது. சிறார்களுக்கு கவர்ச்சிகரமான பல்வகை நிறங்கள் பொதித்த கற்றல், கற்பித்தல் சாதனங்களையும் பயன்படுத்தி விளையாட்டு மூலம் அனுபவங்களை வழங்கும் போது உறுதியான கற்றல் நிகழ்கின்றது.

ஒரு பிள்ளை பிறப்பு முதல் வளர்ச்சி வரை புலக்காட்சியினூடான பிள்ளை வளர்ப்பு வட்டத்தில் புலக்காட்சிக் கற்றலின் செல்வாக்கு விரிவடைந்து செல்கிறது. இதற்கு புலன்பயிற்சியே ஆதாரமாகும். முன்பள்ளிச் சிறார்களின் மூளை வளர்ச்சியில் உடல், உள, மனவெழுச்சி வளர்ச்சியில் புலப்பயிற்சி மிக முக்கிய மாகவுள்ளது. முன்பள்ளிச் சிறார்கள் வீட்டிலும் முன்பள்ளியிலும் பொருட்களைப் பார்க்க எடுத்து ஆராய்ந்து உணர நன்கு கையாள அவர்களுக்கு பல வாய்ப்புக்களை

வழங்க வேண்டும். வினோத, வேடிக்கை, திட்டமிட்ட விளையாட்டுக்களில் ஈடுபடுத்த வேண்டும். ஆடல், பாடல், கதை கூறல், நாடகம், சித்திரம் வரைதல், நீருடன் விளையாட்டு, மணலுடன் விளையாட்டு, வண்ணத்துப்பூச்சி, விளையாட்டுக்கள், விழாக்களை கொண்டாடுதல், சுற்றுலா, ஒப்பனை செய்தல், பூக்களை வகைப்படுத்தல், நிறங்களைக் கொண்டு, மணங்களைக் கொண்டு வகைப்படுத்தல், இவ்வாறான அனுபவங்களை முறைப்படி திட்டமிட்டு முன்பள்ளிகளில் சிறார்களுக்கு புலப்பயிற்சி அனுபவங்ளை வழங்க வேண்டும். இது அவர்களின் எதிர்கால அறிவு வளர்ச்சிகளை வழங்குகின்றன.

இப்புலக் காட்சி விருத்தியடையும் தன்மை கொண்டதுடன் இயங்கும் தன்மையும் கொண்டது. குழந்தை வெளியுலகிலிருந்து புலன்கள் வழியே தாக்கும் தூண்டல்களை அறியும் போது அவற்றை முழுமையாக உணர்கின்றது. உருவ ஒற்றுமை, அடுத்துத் தொடர்ச்சி, அண்மை விதி போன்ற காரணிகள் புலனுணர்ச்சிகளுக்குத் தொடக்கத்திலிருந்தே ஒரு முழு வடிவத்தை கொடுத்து விடுகின்றன.

எனவே குழந்தை வளர்ச்சியில் புலக்காட்சித் திறன் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. குடும்பத்திலும் வீட்டிலும் சிறந்த கற்றல் அனுபவங்களை முன்மாதிரியான நடத்தைகளை சிறார்களுக்கு வழங்க வேண்டும் முன்பள்ளி குடும்பத்தின் மறுபாதியாக அமையும்போது இது வெற்றியளிக்கும் முன்பள்ளி ஆசிரியர்கள் கற்றல் அனுபவங்களை வழங்கும் போது சிறார்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய புலக்காட்சித் தூண்டல்களை வழங்கவேண்டும். புலக்காட்சி அனுபவங்களைக் குறைவாகப் பெறும் சிறார்கள் கற்றல் விருத்தி குறைவாகக் காணப்படுவர். அறிவையும் அனுபவத்தையும் விருத்தியாக்குவதற்கு விளையாட்டுகளினூடாக கல்வி அனுபவங்களை வழங்க வேண்டும். எனவே புலக்காட்சித் திறனூடாக முன்பள்ளி சிறார்களின் அறிவையும் அனுபவத்தையும் வளர்க்க முடியும்.

திருமதி கோகிலராணி
சரவணபவன்,
ஆசிரியர்

# நிலைபேறான அபிவிருத்தியும் சூழல் சவால்களும்

## அறிமுகம் :

நிலைபேண் அபிவிருத்திக் குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையில் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களைப் பேணுவதன் மூலம் நிலை பேறான அபிவிருத்தியின் இலக்கை அடைய முடியும் என்பது ஒரு பரந்து பட்ட கருத்தாகும். ஏனெனில் சூழலைப் பாதுகாத்தல் இன்று மிக முக்கியமானதாக மாறியிருக்கின்றது.

புவி வெப்பமடைதல், ஓசோன்படை அழிவு மற்றும் உயிரின பன்முகத்தன்மையின் சீர்குலைவு போன்ற சூழலியற் பிரச்சினைகள் மிக முக்கியமாக எடுத்துக்காட்டப்படுகின்றன. இவ்விடயங்களுடன் பொருளாதார அபிவிருத்தி முக்கியமாக தொடர்புபட்டதாகவுள்ளதால் பொருளாதார வளர்ச்சிக்கும் சூழல் பாதுகாப்புக்குமிடையில் பொருத்தமான ஒரு சமநிலையைப் பேணுவதற்கான அவசியத்தை இது உணர்த்தியிருக்கின்றது.

## நிலைபேறான அபிவிருத்தி (Sustainable Development)

ஆரம்ப காலங்களில் "அபிவிருத்தி" என்று பேசப்பட்ட எண்ணக்கரு பிற்காலத்தில் "நிலைபேறான அபிவிருத்தி" (Sustainable Development)" என்ற மேம்பட்ட பதத்தினால் அழைக்கப்படுகின்றது. "எதிர்காலச் சந்ததியினர்க்கு பாதிப்பினை ஏற்படுத்தாக வகையில் மக்களின் இன்றைய தேவையினை பூர்த்தி செய்வது மற்றும் வறுமையினை குறைப்பதற்கான ஓர் நடவடிக்கை" என நிலைபேறான அபிவிருத்தியை பிரெண்லாண்ட ஆணைக்குழு முதன் முதலாக 1987ம் ஆண்டு வரைவிலக்கணப் படுத்தியுள்ளது. இது சமூகம், பொருளாதாரம், சூழல் என்ற மூன்று தளங்களில் கட்டியெழுப்பப்படுகிறது. கலாசாரம் மற்றும் தனிமனிதன் என்பனவும் இதன் கூறுகளாக தற்காலத்தில் கருதப்படுகின்றது. நிலை பேறான அபிவிருத்தி என்பது பொருளாதார, சமூக உட்கட்டுமானங்களின் வளர்ச்சியினை முன்னேற்றுவது மட்டுமன்றி முக்கியமாக சுற்றுச்சூழலின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

## நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்:

செப்டெம்பர் 2015ல் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையத்தில் இலங்கை உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து இங்கத்துவ நாடுகளும் புதிய 2030ன் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக 17 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அங்கீகரித்தது. அனைத்து வடிவங்களிலும் உள்ள வறுமையை ஒழித்து மக்களினதும் புவியினதும் செழிப்பிற்கும். ஒருவரையும் பின்தங்கிட விடாத சுபீட்ஷம் மிக்க உலகத்தை கட்டியெழுப்புவதை இலக்காக் கொண்டும் இந்த 17 குறிக்கோள்கள் அமைய பெற்றுள்ளது. அவையாவன

1. எல்லா இடங்களிலும் அனைத்து வடிவங்களிலும் உள்ள வறுமையை ஒழித்தல்
2. நிலைபேறான விவசாயத்தை முன்னிறுத்தி பசியை ஒழித்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்தல்
3. அனைத்து வயதிலும் நலமான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்தல்.
4. அனைவரும் உள்ளடங்கிய சமத்துவமான கல்வியையும் வாழ்நாளுக்கான கற்றல் சந்தர்ப்பத்தினையும் உறுதி செய்தல்.
5. பால்நிலை சமத்துவத்தை அடைவதுடன், அனைத்து பெண்களையும், சிறுமிகளையும் வலுப்படுத்தல்.
6. நிலைபேறான முகாமைத்துவத்தினூடாக நீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவருக்கும் உறுதி செய்தல்.
7. அனைவராலும் பெறக்கூடிய நியாயமான நம்பகத்தன்மை கொண்ட, நிலைபேறான மற்றும் நவீன சக்தியினை உறுதி செய்தல்.
8. கௌரவமான மற்றும் ஆக்கத்திறனை ஊக்குவிக்கும் வேலை வாய்ப்பினையும் எல்லோரையும் உள்ளடக்கிய நிலைபேறான பொருளாதார வளர்ச்சியினையும் முன்னிறுத்தல்.
9. உறுதியாக உட்கட்டமைப்பினை கட்டியெழுப்புவதுடன் எல்லோரையும் உள்ளடக்கிய நிலைபேறான தொழில் மையமாகக்கத்தினையும் புத்தாக்கத் தையும் வளர்த்தல்.
10. நாட்டிலுள்ள மற்றும் நாடுகளுக்கு இடையேயுள்ள சமத்துவமின்மையை குறைத்தல்.
11. உள்ளடக்கமான, பாதுகாப்பான உறுதியான மற்றும் நிலைபேறான நகரங்களையும் குடியிருப்புக்களையும் அமைத்தல்.
12. நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி வழிமுறைகளை உறுதி செய்தல்
13. காலநிலை மாற்றங்களையும், அதன் விளைவுகளையும் எதிர்கொள்வற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல்.
14. கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் பயன்படுத்தல்.
15. சூழலியலின் நிலையான பயன்பாட்டினை பாதுகாத்தல், மீளமைத்தல், முன்னிறுத்தல், மற்றும் காடுகளை நிலைபேறான முகாமை செய்வதுடன் உயிர்ப்பில் வகைத்தன்மையின் இழப்பினை நிறுத்தல்.

**16.** சமாதானமான மற்றும் உள்ளடக்கமான சமூகங்களை ஊக்குவித்தல், அனைவருக்கும் நீதியினை அணுகும் வசதியினை வழங்கலும் அனைத்து, மட்டங்களிலும் வினைத்திறன் மிக்க மற்றும் நம்பகத்தன்மை கொண்ட உள்ளடக்கமான நிறுவனங்களை கட்டியெழுப்பல்.

**17.** உலகளாவிய பங்காளித்துவத்தினை உறுதி செய்து நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகளை வலுப்படுத்தி புத்துயிரளித்தல்.

## சூழல்சார் சவால்கள்:

– உலகின் எல்லா அபிவிருத்திகளும் இயற்கையில் இருந்து எடுத்துக் கொள்ளும் பொருட்களை மையப்படுத்தியவையே அதேவேளை அதுவே நமக்கு ஆபத்தானதாக மாறுகின்றமையை நாம் உணர மறுக்கின்றோம். இந்த உலகத்தை Digital World என அழைக்க தொடங்கி தொழிநுட்பத்தின் உச்சத்தை வைத்துள்ள நிலையில் அதுவே இலக்ரோனிக் கழிவுகளையும் இது இயற்கையிடம் இருந்து வளங்களைப் பெற்றுக் கொள்ளும் இந்த உலகம் அதனை மீளவும் பெற்றுக் கொடுப்பதில் அல்லது எதிர்கால சமூகத்திற்கு மிச்சம் வைக்காமல் அதீத பாவனையின் விளைவால் இயற்கை சமநிலை குழம்பி இன்று காலநிலை மாற்றம் (Climate change) என்று பிரதான பேசு பொருளாகி விட்டது.

ஆரம்ப காலத்திலே நிலைபேறான அபிவிருத்திக்கு இயற்கையை பாதுகாத்து கொண்டு நாம் முன்னோக்கி செல்ல வேண்டும் எனும் கருத்து பரவலாக முன்வைக்கப்பட்டது. இதன்போது ஓசோன்படை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது. பூமியில் இருந்து வெளியாகும் இலக்ரோனிக் கழிவுகள் குறிப்பாக ‘குளோரே புளோரோ’ கழிவுகள் ஓசோன் படையில் ஓட்டைகளை தோற்றுவித்து சூரியனில் இருந்து வரும் புற ஊதா கதிர்களின் தாக்கத்தை அதிகரித்தது. ஆரம்ப காலத்தில் அது பற்றி யாரும் அக்கறை கொள்ளாத நிலையில் இன்று அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டியதாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் இலக்ரோனிக் பாவனை, இறப்பர், பொலித்தீன் பாவனைகளில் இலங்கை அக்கறை காட்டத்தவறியது. உமாஓயா, மேல் கொத்மலை போன்ற சுரங்க வழி நீர் மாற்றுத் திட்டங்கள் இயற்கை சமநிலையை குறைக்கும் என எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட போதும் அவை மேற்கொள்ளப்பட்டன. பொலித்தீன் என்பது உக்கிப் போகாத ஒரு பொருள் அவற்றை பாவிப்பதால் அவை செறிவாக சேர்ந்து பூமியில் நீர் இயற்கையாக பாயும் திசைக்கு இடைஞ்சலாக இருந்து நீரோடும் திசைகளை மாற்றி விடுகின்றது. அபிவிருத்தி குறித்துப் பேசும் அரசியல் கட்சிகளே பொலித்தீன்களை தங்களது கட்சி கூட்டங்களின் போது அலங்கரிப்புக்காக பயன்படுத்தி அப்படியே சூழலில் விட்டுச் செல்கின்ற நிலைமையே காணப்படுகிறது.

அதிகரித்த மனித நடவடிக்கைகள் காரணமாக காடுகளின் அளவு குறைவடைதல், கரையோர அரிப்பு, காற்று மாசடைதல், நிலத்தின் தரம் குறைதல்,

நன்னீர் மற்றும் கடல் நீர் மாசடைதல். கழிவகற்றல். அபாயகரமான சூழல் முறைமகள் போன்ற பல சுற்றாடல் சவால்கள் மோசமான தாக்கத்தினை அபிவிருத்தியின் மீது செலுத்துகின்றன. பொருத்தமான சூழல்சார் கொள்கைகளை வடிவமைப்பதன் மூலமே மேற்கூறிய சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

எமது பிராந்தியத்தில் தரை, வெளி, நிலத்தடிநீர், நன்னீர் நிலைகள் மற்றும் கடற்கரைகள் என்பன வேகமாக மாசடைந்து வருகின்றன. ஆரம்ப காலத்தில் திண்மக் கழிவுகளை சுற்றாடலுக்கு நீங்கு ஏற்படாத வண்ணம் சிறப்பாக கழிவு முகாமைத்துவம் செய்யக்கூடியதாக இருந்தது. தற்காலத்தில் கிராமப்புறங்களில் கூட திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்ய முடியாதுள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள், தமது எல்லைகுட்பட்ட பகுதியில் சேகரிக்கும் கழிவுகளை முறையாக முகாமை செய்வதில்லை. பிரதேச எல்லையில் கொண்டு சென்று கொட்டி தீ வைத்து விடுகிறார்கள்.

திண்மக்கழிவுகளை முகாமை செய்வதற்கான தொழிநுட்பங்களோ, பயிற்சி பெற்ற ஆளணியினரோ போதுமான அளவில் காணப்படாமையுடன் திண்மக்கிழவு முகாமை தொடர்பாக, பாடசாலை மாணவர்கள், பொது மக்களுக்கு வழிப்பூட்டல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் தமது எல்லைக்குள் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையங்களை அமைத்து, தமது எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். இதன்மூலம் பிரதேச இளைஞர்கள் மற்றும் யுவதிகள் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்களும் ஏற்படும்.

மேலும் எமது பிரதேசத்தில் எதிர் நோக்கப்படும் சூழல் பிரச்சினைகளாக இயற்கை வளங்களான, மணல்மண் மற்றும் சுண்ணாம்புக்கற்கள் களவாடப்படுகின்றன. சட்ட விரோதமான முறையில் காட்டு விலங்குகள் களவாடப்படுகின்றன. சட்ட விரோதமான முறையில் காட்டு மரங்கள் வெட்டப்படுகின்றன. கடலரிப்பு, மண்ணரிப்பை தடுப்பதற்காக நாட்டப்படும் சவுக்குமரங்கள் விறகுக்காக வெட்டப்படுகின்றன. இவை தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும் முறையற்ற செயல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவற்றை செய்பவர்களின் மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்பட்டாலன்றி இவற்றை நிறுத்த முடியாது.

இலங்கையில் மனிதர்களிடையிலான முரண்பாட்டுக்கு அடுத்ததாக, பெரிய பிரச்சினையாக இருப்பது மனிதனுக்கும் யானைக்குமுள்ள முரண்பாடாகும். காட்டு யானைகளின் செயற்பாடுகள் காரணமாக பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பயிர்கள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. சொத்துட மைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. யானைகள் பயணிக்கும் பாதைகளை இடைமறித்து மக்கள் தமது வீடுகளையும் வீதிகள் மற்றும் உட்கட்டுமானங்களை அமைத்ததாலேயே இந்நிலை ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றாார்கள்.

## சூழல்சார் முகாமை:

சூழலின் நிலைபேறான பயன்பாட்டை பாதுகாத்தல், மீளமைத்தல் முன்னிறுத்தல் என்னும் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக பௌதீக மற்றும்உ ள்ளக நன்னீர் சுற்றாடல் கட்டமைப்பை பேணிப்பாதுகாத்தல், மீளமைத்தல் மற்றும் அனைத்து வளங்களையும் நிலைபேறான முகாமைத்துவ மேம்படுத்தல், மீள் காடாக்கல் மற்றும் காடாக்கலை அதிகரித்தல், காடழிப்பை நிறுத்தல், அழிவடைந்துவரும் காடுகளைப் புனரமைத்தல், மலைசார் சுற்றாடல் கட்டமைப்பை பேணிப்பாதுகாத்தல், உயிர்ப்பன்மைத்துவம் இழக்கப்படுவதனை நிறுத்தல் மற்றும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள இனங்கள் அருகி வருவதனை நிறுத்தல். வேட்டை பாதுகாக்கப்பட்ட இனங்களை சட்டவிரோதமாக கொண்டு செல்லல், சட்ட விரோத வனவிலங்கு பொருட்களின் கேள்வி மற்றும் வழங்கலை கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல், உயிரியல் பன்மைத்துவம் மற்றும் சுற்றாடல் கட்டமைப்பைப் பேணிகாத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாட்டுக்காக நிதி வழங்கலை அதிகரித்தலுடன் தூய்மையான மற்றும் சூழலுக்கு நட்பான தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்தல்.

## முடிவுரை

தற்கால உலகில் அபிவிருத்திப் போக்கானது நிலைபேறானதாக இல்லை என்பதை சூழல், பொருளாதாரம் மற்றும் சமூக குறிகாட்டிகள் எடுத்தியம்பு வதாகவுள்ளன. வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக இருப்பதுடன் அதிகரித்து வரும் சவால்களையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளதால். இதற்கு நிலைபேறான அபிவிருத்தியே ஒரே தீர்வாகும். தமக்கான நிலைபேறான அபிவிருத்தியில் ஒவ்வொரு நாடும் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இச்சவால்களில் பல எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை யாகவும் வேறு சில குறிப்பிட்ட நாடுகளுக்கு தனித்துவமான வையாகவும் காணப்படுகின்றன. எனினும் இந்த சவாலை வெற்றி கொண்டு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதுடன் இதனூடாக உலகின் சில மாற்றங்களைக் கொண்டுவர முடியும் என்பதும் உலக எதிர்பார்ப்பாகும்.

திருமதி. பத்மாசினி குலநாதன்
ஆசிரியர்

## அதிபர் ஆசிரியர்களுடன் மாணவர் குழாம்



தரம் 01 முதல் தரம் 05 வரை



தரம் 06 முதல் தரம் 09 வரை

## அதிபர் ஆசிரியர்களுடன் மாணவர் குழாம்



தரம் 09 முதல் தரம் 10 வரை



தரம் 10 முதல் தரம் 11 வரை

# Leader ship

Leadership is a great responsibility
that man can hold
and it has a great ability
to force men to creativity

A Leader is some one who can hold
Responsibilities about his crew
and hold his team quietly and
peacefully under his self - confidence

A Leader is some one who can talk
always against injustice
and talk last after studying
Ideas form his crew

A Leader is some one who can understand
his men's rhythms of heart
and can recognize troubles
before they evacuate their hearts

A Leader is some one who has
talking thinking and solving ability
and has good vision to
upgrade his social quality

A Leader is some one who can see the
future before hand
and see the post to
find answers for the present questions

And he is some one who can be
a leader in any situation
but can't be a boss
even for a while

by: A.Ajiththa
Gr.11B

# How can schools play a role in producing? Well - rounded individuals?

School plays an important role in imparting knowledge and producing individuals with high moral and ethical values who contribute to our country's development.

However, there have been accusations that Asian schools are not churning out well - rounded individuals. The main culprit they say is the education system which is heavily exam oriented and although students excel academically they say is the education system which is heavily exam oriented and although students excel academically they are not good in sports or extracurricular activities. Even sought as students are considered only paper smart lacking common knowledge or even skill based knowledge. Thus, Schools play a vital role in ensuring its products are not only academically well qualified but also confident, intelligent and have multiple skills.

The most important step schools should take with the cooperation of the ministry of Education is place less emphasis on scholarly achievements and examination grades. Currently. due to heavy Stress on examination results. Many if not all students stay to excel academically rather than have a balanced approach to studies they study hard and attend tuition classes. This leaves them little time to spend in extracurricular activities or sports.

In order to produce well rounded individuals, grades should be given for assignments, extracurricular activities as well as involvement in sports. Ideally, only 50% of marks should be allocated for examination and the rest for participation in non-academic activities this would produce students with innovative intelligent and creative personality.

In addition, a system should be introduced to make it compulsory for students to volunteer with orphanages, centres for the disabled and

non - governmental organizations. Study environment can be made less mundane and monotonous by introducing outdoor learning students thus, will acquire interest in their studies and would be able to expand their general knowledge schools would stop churning out "book worms"

In all, the task of producing well rounded students and hence, individuals lay heavily on the shoulders of the education ministry and teachers. It is the step in the right direction towards creating a generation that is smart and inquisitive these individuals can contribute tremendously to our nation's development and standing in the world.

V.Pooja
Gr.11

# MY MORNING DUTIES

I get up in the morning
I brush my teeth
I wash my face
I take a bath
I wipe my self
I wear my Uniform
I Pray
I eat my break fast
I put on my socks and shoes
I say good bye to mummy and daddy
I go to school

ச.யஸ்மினி
தரம் 01

# What's for Dinner?

A man feared his wife wasn't hearing as well as she used to and he thought she might need a hearing aid not quite sure how to approach her, he problem. The family doctor to discuss the problem. The doctor told him there is a simple in formal test, the husband could perform to give the doctor a better idea about her hearing loss.

Here's what you do, said the doctor, "Stand about 40 feet away from her, and in a normal conversational speaking tone see if she hears you. If not, go to 30 feet, then 20 feet, and so on until you get a response."

That evening, the wife is in the kitchen cooking dinner, and he was in the living room. He says to himself, "I'm about 40 feet away, let's see what happens." Then in a normal tone he asks, "Honey what's for dinner?" No response.

So the husband moves to closer to the kitchen, about 30 feet from his wife and repeats, "Honey, what's for dinner?" still no response. Next he moves into the dining room where he is about 20 feet from his wife and asks, "Honey,

What's for dinner? Again he gets no response. So, He walks up to the kitchen door, about 10 feet away. "Honey, what's for dinner?" Again there is no response.

So he walks right up behind her. "Honey, what's for dinner?"

"Raju, for the fifth time I've said, Chiken!"

Moral: The problem may not be with the other one as we always think, could be very much with in us....!

K.Vanujan
Grade 11A

# நல்ல மனம் உண்டாம்

இன்றைய உலக வாழ்க்கையில் ஏற்படும் இடர்களையும் துயரங்களையும், இன்னல்களையும் இடுக்கண்களையும் அகலங்களையும் போக்குவதற்கு என்ன வழியென்பதே பலருடைய கேள்வியாக உள்ளது. அதற்காக எமது முன்னோர் காட்டிய வழிபாடு என்னும் வழிகாட்டலைப் பற்றி மீண்டும் எண்ணிச் செயற்பட வேண்டியுள்ளது. குறிப்பாக எமது இளைய தலைமுறையினரும் சிறாரும் தமது எதிர்கால வாழ்வியல் பற்றி மிகுந்த சிக்கல்களையே எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். இவர்களது வாழ்வியலைச் சீர் செய்ய வேண்டிய முதன்மையான கடமையொன்று பெற்றோருக்கும் நலன்விரும்பிகளுக்கும் காத்து நிற்கின்றது. அதற்காக எமது முன்னோரின் வழிபாடு பற்றிய கருத்துக்களின் தடங்களைத் தேடிச் செல்ல வேண்டியுள்ளது. அத்தகையதொரு புதிய தேடுதலின் போது கிடைத்த செய்திகளின் சுருக்கமான தொகுப்பே உள்ளடக்கமாக அமைகின்றது.

“வழிபாடு” பற்றிய தெளிவினை ஏற்படுத்தும் பயிற்சிக்களங்களாகக் கோவில்கள் அமைந்துள்ளன. இங்கு உறவும் ஊரும் நட்பும் ஒருங்கிணைந்து செயற்படுவது வழிபாட்டின் அடிப்படையான நோக்கமாக உள்ளது. பலருடைய நலங்களைப் பேணும் பண்பாடு கோவில் வழிபாட்டின் மூலம் பயிற்றப்பட்டது. தொடக்க காலத்தில் மனிதன் இயற்கையை அதன் பேராற்றலைக் கண்டு பணிந்து வழிபடத் தொடங்கினான். அந்த இயற்கையின் ஆற்றல்களைத் தனது தலைமுறையினர்க்கும் எடுத்துரைத்து வழிகாட்டினான். இத்தகைய வழிகாட்டிகளை இளந்தலை முறையினரும் சிறாரும் வணக்கத்திற்குரியோராகக் கருதி வாழ்ந்தனர். கோயில் என்னும் அமைப்புத் தோன்றிய போது வழிபாடு என்னும் வாழ்வியற் செயற்பாடு மாற்றமடையலாயிற்று. இயற்கையின் பேராற்றல்களை இறை உருவங்களாகக் கண்டு வழிபடும் புதியதொரு மரபு தோன்றியது. ஆனால் தொடக்க நிலையில் கோயில் என்பது பெருங்கட்டட அமைப்பாக இருக்கவில்லை. சிறிய கொட்டில் அமைப்பாகவே இருந்தது. பெருமரத்தடியிலும், மலையிலும், நீர்நிலைகளிலும், ஆற்றங்கரைகளிலும் இறைவன் உறையும் மாடங்கள் அமைக்கப்பட்டன. அங்கு ஆண்டுக்கொருமுறை மக்கள் சென்று இறைவனைத் தரிசனம் செய்து வழிபட்டனர். தமது விளைபொருட்களை மடையிட்டுப் பரவினர். பின்னர் அதனைப் பகுத்துண்டு மகிழ்தனர். இதனால் வழிபாடு என்றும் செயற்பாடு படையில் என்னும் செயற்பாட்டுடன் இணைந்து “திருவிழா” என விழா நிலையில் நடைபெறலாயிற்று.

அதே போன்று கற்றல் வழிகாட்டல்களும் உபநிடதக்கல்வி மலையடிவாரத்தில் இருந்த முனிவர்களிடம் சென்று குரு, சீடர் முறையில் அமைந்த கல்வி வளர்ச்சி, திண்ணைக் கல்வி, கொட்டில்கள் அமைத்து பாடசாலை முறை என்பன கல்வி வளர்ச்சிக்கு அத்திவாரம் இட்டு இன்று பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், இணையக்கல்வி என பரிணாம வளர்ச்சி அடைந்து மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா என்னும் நிலையை அடைந்த பெருமை யா/ குட்டியப்புலம் அ.த.க பாடசாலையும் அமைந்தமைக்கு நலன்விரும்பிகளும், பெற்றோர்களும், நல்லெண்ணம் கொண்ட பெரியோர்களுக்கும் எதிர்கால சிறார்கள் சான்றாகும்.

ச.டிலக்சனா

தரம் - 10

## பொன் வாசகம்

1. உயிர் போக நேர்ந்தாலும் நீ பேச வேண்டியது உண்மை
2. இறுதி மூச்சு உள்ளவரை நீ மீறாது இருக்க வேண்டியது கடமை
3. உலகில் உயிரோடு வாழ்வதில் மட்டும் வாழ்க்கையில்லை, உரிய கொள்கைகளுக்காக மடிவதிலும் உள்ளது.
4. எது வரினும் அவையெல்லாம் நன்மைக்கே என ஏற்றால் துயரம் வளைத்துச் செல்வது நல்லது.
5. வையகத்தில் இல்லற இயல்புடன் சிறந்து வாழ்பவன் கடவுள் என்னும் தனிமையில் வைத்து மதிக்கப்படுவான்.
6. நாளைய மழை அறியும் எறும்பாய் இரு. நேற்றைய
7. பொறுமையே மனிதனுக்கு வேண்டிய நன்மையைத் தருகிறது
8. கோபம் அறிவீனத்தில் தொடங்கி துக்கத்தில் முடிகின்றது.
9. பணம் வந்து போகும். நல்லொழுக்கம் வந்து வளரும்.

அ.அக்ஷா

தரம் 07A

## எம் தாய் மொழி

எம் தாயிடம் இருந்து கற்கும் மொழி நமக்கு தாயாய் அமர்ந்து உலகியலை கற்கும் மொழிதான் நம் தாய் மொழி. அதுதான் எங்கள் தமிழ் மொழி. நம் கண்களாய் அமைந்து எல்லாவற்றையும் பார்க்க துணை புரிகின்றது. தாய் மொழியின் பெரு வரத்தின் ஆற்றல் புரியாமல் இன்னும் இயல் மொழிகளை தூக்கி பிடிப்பது நியாயம் தானா?

தமிழ் எழுத்துக்களோடு மட்டும் தொடர்புடைய மொழியன்று பண்பாடோடும் தொடர்புடையதுதான் எங்கள் மொழியாம் உலகம் முழுக்க எட்டுக்கோடி தமிழினத்தின் மொழி திராவிட மொழிகளின் தாயாக திகழ்கின்றது எம்மொழி. உலக தமிழர்கள் வாழும் வெளிநாடுகளிலும் அதாவது சிங்கப்பூர் மலேசியா கனடா என்று பல்வேறு நாடுகளிலும் தொப்புள் கொடி உறவாம் அன்னை தமிழ். உறவை இனிய தமிழ் பள்ளிகளை கொண்டு மென்மேலும் உறுதிப்படுத்துகின்றார்கள்.

நாமோ நம் மொழியை மறந்து விட்டு அயல் மொழி மயக்கத்தில் அமர்ந்து கொண்டிருக்கின்றோம் சிங்கப்பூரில் தேசிய மொழிகளில் ஒன்றாக நம்தேவி சிங்காசனத்தில் மகிழ்வோடு அமர்ந்திருப்பது தமிழர்களாகிய எங்களுடைய பெருமை என்று சொல்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை அந்நாடெங்கும் அறிவிப்புக்கள் தமிழிலே ரீங்காரமிடுவதை இன்றும் காண முடிகின்றது. நான்கு தேசிய மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாக திகழ்கின்றது.

நாம் எப்படி மாறுவது நம் சல்லடையால் சமுத்திரத்தை சலிக்கின்ற மாதிரி தமிழ் கல்வியை விட்டு அப்பால் போய் கொண்டிருக்கின்றோம். தொடக்க கல்வி முதல் மருத்துவக் கல்வி வரை தமிழ் மொழியால் பயில்வது சாலச் சிறந்தது. கட்டாயமாக்கப்பட வேண்டியதும் ஒன்று பாராதிக்கு தாய் மொழி மீது அளவற்ற அன்பு செந்தமிழ் நாடெனும் போதிலும் இன்ப தேன் வந்து பாய்ந்தது அவன் காதினிலே மொழி கற்ற அந்த கவிக்கு தாய் மொழியே இனித்தது.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம் என்று சொல்ல வைத்த தமிழின் மீது பற்றுக் கொண்டே இருப்போம். தமிலோசை இதயமெல்லாம் ஒலித்திடும் இந்த புது யுகத்தில் தமிழின் மிக பழமையான இலக்கண நூலான தொல்காப்பியமும் எட்டுத் தொகை நூல்களும் இன்னும் கற்க முடிகின்றது என்பது எத்தனை அழகானது.

நாம் செய்ய வேண்டியது என்ன முன்னேற்றத்தின் முகவரியாய் அமையும் தாய் மொழியை காப்பது நம் கடமை எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலையை அனைவரின் உள்ளத்திரையிலும் கொண்டுவர வேண்டும். வருவோம் என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறும் நான் தமிழ் மொழியின் அன்பு கொண்ட.....

குகசீலன் கனிவிழி
குட்டியப்புலம் அரசினர் தமிழ்
கலவன் பாடசாலை
தரம் - 07

## அ தொடக்கம் ஃ வரை

"அ" தந்தது அன்பு
"ஆ" மொழிந்தது ஆமை
"இ" தந்தவர் இறைவன்
"ஈ" எறியும் ஈட்டி
"உ" தந்தது உலகம்
"ஊ" ஆடும் ஊஞ்சல்
"எ" ஊரும் எறும்பு
"ஏ" உயர்த்தும் ஏணி
"ஐ" உணர்த்தும் ஐயம்
"ஒ" மொழியும் ஒழுங்கு
"ஓ" எழுந்து நீ ஓடு
"ஔ" கூறும் ஔவை
"ஃ" உயிர்களின் முடிவாம்

ப.பவித்திரா
தரம் 01

## பழியும் பழ மரமும்

தழைக்கவில்லை என்பதற்காய்
காய்க்கவில்லை என்பதற்காய்க்
கனி மரத்தை ஏசாதீர்
செழிக்கவில்லை என்பதற்காய்
மரத்தைக் குறை கூறாதீர்
மற்றவரைப் பழியாதீர்
உம்மையே நீர் கேளும்
நீரென்ன செய்தீர்
ஒரு பொழுது நீர் கொண்டு
உம் கையாற் பெய்தீரா?
மண்ணில் உரம் இட்டீரா?
குனிந்து களை எடுத்தீரா?
புல்லுருவி தொற்றினங்கள்
பரவமுனம் களைந்தீரா?
அனைவரிலும் குறைகண்டு
பழியுரைப்பதைத் தவிர்த்தால்
எதனினுமே ஒட்டாமல்
தாமரையின் இலைமேலே
நீர்த்துளிபோல் நின்றிருந்தீர்
மரம் மட்டும் எவ்வாறோ
கடுங்காற்றைக் கொடும் வெய்யிலை
விலங்குகளின் கடி மிதப்பை
மீறி உயிர் பிழைத்து
மெதுவாய் மிக மெதுவாய்
வளர்கிறது உயர்கிறது
வேளை வரும் - அப்போது
யாவினையும் மேவியெழும்
யாவர்க்கும் கனிவழங்கும்
சும்மா இருந்து
குறை சொன்ன உமக்குத்தான்
கல்விச்சாலையே குட்டி மண்ணே

லெனிக்கா
தரம் - 11

# மலர்க்குழு

| | | |
|---|---|---|
| கௌர ஆலோசகர் | : | திரு.வை.விஜயபாஸ்கர் (அதிபர்) |
| இணை ஆலோசகர்கள் | : | திரு.கெ.சுரேஸ் (பிரதி அதிபர்) |
| | | திருமதி.ப.ருக்மன் (உப அதிபர்) |
| பொருளாளர் | : | திரு. கென்றி ஜேக்குனராஜா |
| மலர் ஆசிரியர் | : | திருமதி. நந்தினி இடபாருடன் |
| இணை ஆசிரியர்கள் | : | திரு.பொன்.சசிறூபன் |
| | : | திரு.ச.இராசலிங்கம் |
| | : | திருமதி.ப.குலநாதன் |
| | : | கோ.சரவணபவன் |
| | : | செல்வி.த.சோபிதா |

# இதழாசிரியரின் நன்றி உரை

யா/குட்டியப்புலம் அ.த.க பாடசாலையின் இரண்டாவது மலராக இவ் வைரவிழா மலர் தங்கள் கைகளில் தவழுகின்றமை எமக்கெல்லாம் பெருமையைத் தருகின்றது.

எமது பொருளாதார வளத்திற்கு ஏற்ப ஒரு சிறிய மலரினை வெளியிடுவதற்கு பாடசாலையின் நிறுவுனரும் முதல் அதிபருமாகிய திரு.ஜோன் ஹென்றி குடும்பத்தாரின் அனுசரனையுடன் தற்போதைய அதிபர் திரு.வை.விஜயபாஸ்கர் அவர்களின் ஆலோசனை களின் படி மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டபோது மாணவச் செல்வங்களும், ஆசிரியர்களும் அளித்த ஆக்கங்கள் ஏராளமானவை, அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரு சிறிய மலரினுள் அடக்க முடியாது. அவற்றுள் மிகப் பொருத்தமானவை தெரிவு செய்யப்பட்டு வைரவிழா மலராக வெளி வந்துள்ளது. அவை உங்கள் அனைவருக்கும் பயனுடையவையாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

2018ம் ஆண்டு “வைரவிழா” மலர் சிறப்புற ஆசிச்செய்தகளையும் வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய ஆன்றோருக்கும், அறிவுசார் ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள் அனைவருக்கும் எம் இதயங்கனிந்த நன்றியை மலர்க்குழு சார்பாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் என்னுடன் ஒருங்கிணைந்து செயற்பட்ட மலர்க்குழு உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுவதோடு ஏனைய ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்கி, ஆலோசனை நல்கிய பாடசாலை சமூகத்திற்கும் எம் இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“வைரவிழா” மலர் பொலிவுடனும் அழகுடனும் வெளிவர வேண்டும் என்னும் பெரு விருப்புடன் படங்கள் மற்றும் ஆக்கங்களை உரிய முறையில் ஒழுங்கமைத்து வடிவமைப்பு செய்து உதவிய திரு.பிரான்சிஸ் றெஜின் நியூட்டன் அவர்களுக்கும், படங்கள் வடிவமைத்து தந்த திரு.கி.நிறோஜன் அவர்களுக்கும், குறுகிய காலத்தில் கணனி வடிவமைப்புக்கு உட்படுத்தி நூல் வடிவில் அழகுறச் செய்த டிவைன்மேசி அச்சகத்தினருக்கும் மலர்க்குழு மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது. வைரவிழா மலர் சிறப்பாக வெளிவர உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் மீண்டும் மீண்டும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

நன்றி

திருமதி.நந்தினி இடபாருடன்
இதழாசிரியர்






யா/குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை
வயாவிளான்
கற்றாய்ந்தொழுக



